தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு--121

# குடந்தை யந்தாதி

[ பொழிப்புரையுடன் ]

தஞ்சாவூர்

மஹாராஜா சரபோஜியின் ஸரஸ்வதி மஹால்

நூல் நிலையம்

சகம் 1890 ]    விலை ரூ. 1-50    [ கி. பி. 1968

தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு--121

# குடந்தை யந்தாதி

[ பொழிப்புரையுடன் ]

பதிப்பாசிரியர் :

**வித்துவான் திரு. S. ராமலிங்கம் பிள்ளை,**

ஓய்வு பெற்ற தமிழாசிரியர், தஞ்சை.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் குழுவிற்காக
கௌரவக் காரியதரிசி,
O. A. நாராயணஸ்வாமி, B.A., B.L., அவர்களால்
வெளியிடப்பட்டது.

சகம் 1890 ] விலை ரூ. 1-50 [கி.பி. 1968

முதற் பதிப்பு 1968.

திருச்சி சேவா சங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.—1968.

# PREFACE

'*AARAAVAMUDAM*'—the Nectar that never satiates—What a thrilling and honeyed expression of ecstasy which sweetens the tongue that utters it! Language has never found a more appropriate term for God, whom the Upanishads define as *Aanandamaya*, 'the Essence of Bliss Absolute.' Such is the name by which the seers of Tamil Nad, the Alwars, have sung in their hymns about Sarangapani, the Presiding Deity of the chief Vaishnavite shrine in Kudanthai, popularly known as Kumbakonam.

Six out of the ten Alwars have extolled the Lord of Kudanthai in their hymns. Nammalvar, the foremost among them, has devoted one full section of ten inimitably sweet and profound stanzas to adore Him. Two of them are rendered here in English to produce in the reader the psychological environment to enjoy the present *Andadi* on the same Lord which is placed before them :

Oh! Insatiable Nectar!

Thou hast made my very limbs melt into liquid
streams of love and flow with undulating
movement towards Thee.

Here, Thou hast come to stay, manifesting
thine enrapturing form in the holy, charming
shrine at Kudanthai.

Encircled with the limpid and fertilizing streams,
and with sheaves of ripened paddy
waving about like *chauries*.

Oh ; my Lord, Here indeed I have visualised thee*

* * * * *

Now I weep and now I fall prostrate ;
Now I dance in ecstasy, hoping to see Thee ;
Now I rave aloud in hymnal strains.

Haunted by mine own Fate, I gaze around and
hang my head in shame at my ineffectual
longing.

But Thou hast taken Thine abode, (solely to lift us
all) amidst the fertile and sparkling waters in
Kudanthai.

It is for Thee to manoeuver to captivate this
supplicant with the glances of thine eyes which
vie with red loluses.

And to draw him to Thy feet.**

Religious and philosophical emotion has been an undrying spring of inspiration to the poets of India. Following the foot-steps of the Saints, Alvars and Nayanmars, successive generations of poets have attempted to realise the goal of their existence by contributing to these religious rhapsodies and the author of this *Andadi* deserves a place of honour among them.

---

* Thiruvaimoli V-viii—1. ** Thiruvaimoli V-viii—5.

The *Andadi*, the chain of linked stanzas, one of the most popular patterns of minor poems, exclusive to Tamil literature, has been handled by many Tamil poets as the medium of utterance for the outpour of their descriptive power and devotional fervour. Some poems of this category contained in the manuscripts of this Library have already been published and some are to follow. This poem by an unknown author ardently extols the glory of *Aravamudan* enshrined in Kudanthai, fervently appeals to his grace and vouchsafes, with confidence, happiness in this world and the next, and ultimate Beautitude to the one who sings about Him.

In the Tamil introduction, the learned Editor has entered heart and soul into the spirit of the poem and has provided the reader with sufficient introductory material to enjoy the beauties and to admire the sublimities of the poem. No other purpose except that of a linguistic variation will be served by repeating them here. But a few words have certainly to be said about the arduousness of the task involved in editing this work. Only one manuscript of the poem, bearing M. No. 139 was available in this library and it was full of lacunas, scriptorial errors and with many words and lines mutilated beyond recognition by the inroad of inseets. No other manuscript could be secured elsewhere except the transcribed copy of an incomplete manuscript from the Government Oriental Manuscripts Library, Madras, covering only about

half the poem. Despite its similar defects, it has stood us in good stead, as far as it goes and we are certainly obliged to the Government Oriental Manuscripts Library for the use of their material.

The Editor has made the best job out of it by editing with clear and lucid rendering into Tamil, all the stanzas which he could shape out with difficulty. He has left untampered, in an Appendix at the end of the book, the few extremely mutilated or unintelligible stanzas. It is hoped that future research or discovery of the manuscripts of the poem may shed light, in course of time not only on the contents of these stanzas but also on the identity of the author to which we have so far no clue. The Library owes its thanks to Vidvan S. Ramalingam Pillai for the scholarly pains he has taken to edit this poem.

Our thanks are essentially due to the State Government of Tamil Nad for their munificent financial aid which has rendered possible for us to bring out literary treasures like this, which are preserved in this library.

THANJAVUR, 28—3—1968

O. A. NARAYANASWAMI,
*Honorary Secretary,*
T. M. S. S. M. Library.

# முன்னுரை

திருமகள் கணவனும் திருமால், "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராதே ஆள்கின்ற எம்பெருமான்" என்று பட்டர்பிரான் திருவாக்கிட்ட கணக்கிலே உபய விபூதியையுந் தாமே தனி முடி கவித்து ஈரரசு படாதே ஆள்கின்றான்.

இந்நிலையில், பாவமே பச்சையாய் நிற்கும் இப்பாருலகத்துச் சேதன வர்க்கங்கள் யாவும் உய்தற் பொருட்டு அப்பெருமான் தானே திருவுளம்பற்றி யேற்றுக்கொண்ட ஐந்துநிலைகள் உண்டு. அவ்வைந்து நிலைகளிலும் இருட்டறையில் ஒளிபோலவும், வேட்கை கொண்டவனுக்குப் பேராறு போலவும் அருள்மடுவாயிருப்பது அர்ச்சாவதாரமே. அதாவது, திருக்கோவில்களிலே திவ்யமங்கள விக்ரகத்துடன் திருவுருவங் காட்டி யெழுந்தருளியிருப்பதே. இவ்வர்ச்சாநிலையை "பின்னானார் வணங்குஞ் சோதி" யென்று பணித்தார் திருமங்கையாழ்வார்.

அர்ச்சவதாரப் பெருமான்கள் உகந்த திவ்விய தேசங்கள் நூற்றெட்டாகும். ஆழ்வார் வாக்கிலே புகுந்து வெளிப்பட்ட இடமெல்லாந் தமர்களுக்குரிய இடம் என்றபடிக்கு இத்திவ்ய தேசங்கள் யாவும் திருமால் வழிபாட்டிற்குச் சிறப்புள்ளவைகளாயினும் அவற்றுள் சில திவ்ய தேசங்களைப் பெரியோர்கள் பரிந்து போற்றுவார்கள். அவை திருவரங்கம், திருமலை, பெருமாள் கோயில், யதுசைலம், திருக்குடந்தை என்பனவாகும்.

திருமணங்கொல்லையிலே, அன்று திருமங்கை மன்னன் வாள் வில்லேந்தி யச்சுறுத்தி, திவ்ய தம்பதி

களையே ஆசாரியவரணம் பண்ணுமாப்போலே பண்ணித் திருமந்திரோபதேசம் பெற்றார். திருமந்திரங் கொண்டதுமே கலியன் திருவாக்கும் மலர்ந்தது. அப்பொழுது அவருக்கு முதன்முதலாக நினைவிற்கு வந்தது நம் ஆராவமுதே. எங்ஙனமோவெனின் "வாடினேன் வாடி" என்று தொடங்கிய அத் தேம்பெருக்காந்திருப் பதிகம், ஒரு திவ்யதேசத்திற் குரியதல்லவாயினும் அதிற் குடந்தையையே கூறியுள்ளார். இம்முன்னுரைக்கு அப்பாசுரம் மிகமிகப் பொருத்தமாகும்.

இற்பிறப் பறியீ ரிவரவ ரென்னீர்
　　இன்னதோர் தன்மையென் றுணரீர்
கற்பகம் புலவர் களைகண்என் றுலகில்
　　கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொரு ளாளீர் சொல்லுகேன் வம்மின்
　　சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் நாடிநீர் உய்ம்மின்
　　நாராய ணாவென்னும் நாமம்.

ஆஹா ! அருமைத் திருப்பாசுரத்தின்னழகுதான் என்னே ! அவ்வாரா வமுதினழகையே யொத்து மிளிர்கிறது. 'குடந்தையே தொழுமின்' என்ற இடத்துத் தேற்றேகாரமும், 'நற்பொருள்காண்மின்' என்ற ஆற்றுப் படையும் அள்ளூறித் தித்தித்து உள்ளத்தை யீர்க்கின்றன.

## தலச்சிறப்பு

இத்தலத்தைக் 'குடந்தை,' 'கும்பகோணம்' என்ற பெயர்களாலழைப்பார்கள். 'குடமூக்கு' என்றும் கூறப் பெறும். மற்றுங் கோமளவல்லித் தாயாரை யேற்றுத் திருமணங்கொண்ட திவ்ய தேசமாகையினாலே இதற்குக் 'கலியாணபுரம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு. சோழ

நாட்டுத் திவ்ய தேசங்கள் நாற்பதாகும். அவற்றுள் இத்தலம் பதினேன்காவது தலமாக அமைந்துள்ளது. ஹேமரிஷிக்குப் புத்திரியாக அவதரித்த கோமளவல்லித் தாயாரை அமுதன் மணந்துகொண்ட பெருஞ் சிறப்புடையது. பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கைமன்னன் ஆகிய எழுவராலும் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற பெரும் பெருமையுடையது.

### திருக்கோயிற் சிறப்பு

இக்கோயிலின் கோபுரம் கண்டார்ப் பிணிக்குந் தகையது. அன்று, 'பெருமான் கொண்ட திருவிக்ரமாவதாரமோ இதுவென்றும், அடியார்குழாங்களை வைகுந்தத்திற்கு அழைத்தேக அமைத்த திருப்படிகளோவென்றும் எண்ணுமாறு காட்சியளிக்கும், அத்திருக்கோபுரம். இறைவன் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகம் அழகு வழியுந் தேராக அமைந்திருக்கிறது. இறைவன் திருமணஞ் செய்துகொள்ளக் குடந்தைக்கு வைகுந்தத் திருந்து வந்த ரதம் அப்படியேயிருக்கிறது. இதனழகு கண்டவர்களுக்கே விளங்கும். மற்றும் உத்தராயண தட்சிணயண தேவதைகளிருவரும் அக்கருவறையின் வாயிலாகச் சமத்துவம் பெற்றிருக்கிறார்கள். தட்சிணயனத்தில் மரித்தவர்களுக்கும் மோட்சம் உண்டு என்ற அரிய பெரிய ஐதிகத்தைப் புலப்படுத்துகிறது இக்காட்சி. இக்கருவறைக்குத் 'திருமாமணிமண்டபம்' என்று பெயர்.

பெருமாள், நாச்சியார் திருக்கோலம் பூண்டு மோகினி யலங்காரத்துடன் சேவை தருவது பல திவ்ய தேசங்களிலுண்டு. ஆனல் மார்கழி பதினைந்தாந் திருநாளன்று ஆராவமுதும் கோமளவல்லித் தாயாரும்

தங்கள் தங்கள் ஸ்வரூபத்துடனும், பத்தொன்பதாந் திருநாளன்று பெருமாள் தாயாராகவும், தாயார் பெருமாளாகவும் திருக்கோலம் பூண்டு தங்களுடைய சேஷசேஷி பாவத்தை ஒருவருக்கொருவர் மாற்றிப் பரிமாறிக் கொண்டு பக்தகோடிகளுக்குச் சேவை ஸாதிப்பது இத் திருப்பதிக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

மூலவர், 'ஆராவமுதன்' என்றும், உத்சவர் 'சார்ங்கபாணி' என்றும் திருநாமங்கள் கொண்டவர்கள். விமானம் வைதிக விமானம். கிழக்கே திருமுகமண்டலம்; உத்தான சயனம்.

## மூர்த்தியின் சிறப்பு

மூலவர், 'ஆராவமுது' என்றுதான் அழைத்துப் போற்றப் படுவார். சார்ங்கராஜா ராஜாவேதான். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்பது பாசுர மன்றோ! அவ்விரு மூர்த்திகளின் கொள்ளைகொள்ளும் பேரழகைச் சொற்களாலும் பாக்களாலும் ஏடுகளாலும் விளக்க வியலவேயியலாது.

காட்டுமன்னார் கோயிலிலே ஒருநாள், திருநாராயணபுரத்து அடியார்கள் "ஆராவமுதே" என்றபதிகம் ஓதியிறைவனை வழிபட்டு நிற்க, அதனைக்கேட்டிருந்த நாதமுனிகள் 'இன்னும் பாசுரம் வருமோ' என்று கேட்டனர். அவர்கள் இப்பத்துந்தான் எமக்கு வருமென்று கூறினர் அப்பதிகத்தின் கடைசியில் வரும் "ஓராயிரத்துளிப்பத்தும்" என்ற பாசுரப் பகுதியைக் கேட்டதும் நாதமுனிகள் மற்றைப்பாசுரங்களையும் தேடிச்சென்று கண்டு திருநகரியிலே திருப்புளியடியிலே நம்மாழ்வாரை யோகதசையில் ஸாக்ஷாத்கரித்து, அவரிடமிருந்து திருவாய் மொழியைப் பெற்றளித்தார் என்பது வரலாறு. ஆகவே அவ்வா

யிரமுங் கிடைக்க அருந்துணையாகஇருந்த ஆராவமுதை “திருவாய்மொழிதந்த பெருமான்” என்று பக்தர்கள் போற்றிப் புகழ்வாராயினர்.

குடந்தையின் சிறப்பினை வாமனபுராணம் கூறு கிறது. சார்ங்க ராஜாவைச் சரணம் புகுந்தவர்களுக்கு யமபயம் இல்லையென்றும் ஒருசிறப்பு அதில் சொல்லப் பெறுகிறது. இக்கருத்து, இவ்வந்தாதி ஆசிரியரால் “கூற்றினுயிர், குன்றுமதிக் கும்பகோணத்தினுர்க்கில்லை கூறினமே” (46) என்று கூறப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இத்திவ்ய தேசத்தில், “பைந்தமிழ்ப்பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலாகிய” ஆராவமுதன் திருமழிசைப்பிரான் சொன்ன வண்ணம் செய்தான். “எழுந்திருந்து பேசுவாழிகேசனே” என்ற அருமைத் திருப்பாசுரப் பகுதியும் இறைவன் கொண்டிருக்கும் உத்தானசயனம் என்னும் திருக்கோலமும் அச்செயலை அன்பர்களுக்கு அறிவித்து வருகின்றன.

தேரிலமர்ந்திருக்கும் இறைவன் திருக்கோலத் தையே, ரதபந்த மென்னும் யாப்பிலிட்டு திருவெழுகூற் றிருக்கையாகத் திருமங்கை யாழ்வார் பாடியிருப்பதனுலே இத்தலத்தின் திருத்தேர், சித்திரத்தேர் என்று நாடு போற்றும் நற்புகழைப் பெற்றிருக்கிறது.

கிருஷ்ணுவதாரத்தில் மிகச்சிறந்த லீலைகள் மூன்று. வெண்ணையுண்டது, கோவர்த்தனகிரியெடுத்தது, குடக் கூத்தாடியது. இம்மூன்றில் பெருமாள் இத்தலத்திலே தான் அக்குடக் கூத்தையாடினுன். “குடமெடுத்தாடிய யென்றந்தை” என்று ஆராவமுதனின் சிறப்பைக் கூறும் சொற்ருெடரின் ஆதியந்த எழுத்துக்களே “குடந்தை” என்ருயிற்று என்ருர் ஒரு அன்பர். இது நன்கு சுவைக்கத்தக்கதோர் கருத்தாகும்.

## நூற் சிறப்பு

இத்தகைய பெருமை யெல்லாம் பெற்று விளங்கும் குடந்தையாந் திவ்யதேசத்தில் திருக்கோயில் கொண் டெழுந்தருளித் திகழுந் திருமாலாம் ஆராவமுதின் மீது அந்தாதித் தொடையால் புனைந்துரைக்கப் பெற்ற நூறு பாடல்களே குடந்தையந்தாதியாகும். தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறுவகைச் சிறுபிரபந்த வகைகளுள் அந் தாதியும் ஒன்றாகும். அந்தாதி அந்தத்தை ஆதியாக வுடையது. அன்மொழித் தொகை. அந்த-ஆதி எனப் பிரிக்க. அந்தாதியாவது முன்நின்ற செய்யுளின் ஈற்றி லுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடி யாயினும் அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும் படிப் பாடுவது. இங்ஙனம் பாடப்பெறும் நூலினது ஈற் றுச் செய்யுளினது அந்தமே முதற் செய்யுளின் ஆதியாக அமையவைத்தல் மண்டலித்தல் எனப்படும்.

பதிற்றந்தாதி, நூற்றந்தாதி என்ற வகைகளில் இந் நூல் நூற்றந்தாதியாகும் இந்நூல் அந்தாதித்தொடை யாலமைந்த நூறு கட்டளைக் கலித்துறைகளை உடையது. சொற்றொடர்நிலைச் செய்யுள், பொருட்டொடர்நிலைச் செய்யுள், என்ற வகையில் இது சொற்றொடர்நிலை "நூறுவெண்பா, நூறுகலித்துறை கூறுதல், நூற் றந்தாதிக்கோளே" என்பது இலக்கண விளக்கப் பாட் டியல். "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்ற தண்டியலங்கார நூற்பாவும் இக்கருத்தை வலியுறுத்தல் காண்க. ஆசிரியர் தொல்காப்பியனார் செய்யுளியலில் "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்று கூறியுள்ள நூற்பாவுக்கு "புதுவது கிளந்த யாப்பின்மேற்று" என்றது என்னையெனின் புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் பலசெய்யுளுந் தொடர்ந்து வரச்

செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க" என்று பேராசிரியர் உரை கூறினமையின் அந்தாதி யென்னும் பிரபந்தம் "விருந்து" என்ற வகையின்பாற்படும் என உணரலாம்.

## நூலாசிரியரும் புலமைச் சிறப்பும்

இக்குடந்தை யந்தாதியின் ஆசிரியர் பெயர் அறிவதற்கியலவில்லை. நல்ல காரியங்களைச் செய்கின்ற பெரியோர்கள் ஊரும் உரையாது பெயருங்கூறாது செய்துதவ வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம் போலும். ஆதலாலேதான் உலகினர்க்குப் பெரிதும் பயன்படும் நூல்களைத் தந்தருளிய சிலபல ஆசிரியர்களின் வரலாறுகள் கிடைக்காது போகின்றன. இவ்வாசிரியரின் வாக்கு, வளப்பமாகவே அமைந்திருக்கிறது. வைணவ மதத்தைச் சார்ந்தவராகக்கருத இடமுண்டு. திருமாலினிடம் இவருக்குள்ள பக்திப் பெருக்கையும் மாயையாகிய உலகவாழ்கையில் மிகுந்த வெறுப்பையும் இவ்வந்தாதிப் பாடல்களிலே காணலாம். நல்ல வருணனைகளையும், பண்டைப் புராணங்களின் கருத்துக்களையும் ஆசிரியர் அமைத்துப் பாடுகின்றார். இவரது பாடல்கள் வைணவ சமயத்திற்குரிய சாத்திர, தோத்திரக் கருத்துக்களையும் நன்கு புலப்படுத்திச் செல்லுகின்றன.

இவரது உள்ளம், விரைந்து வைகுந்தம் பெற வேண்டும் என்று விழைகிறது. வைணவ சம்பிரதாயத்தை நன்கு உணர்ந்தவ ரென்பதை இவரது பாடல்கள் மெய்ப்பிக்கின்றன. தமது பாட்டுடைத் தலைவனாகிய திருமாலின் திருநாமத்தை அமுதென்றே இவரும் அழைக்கின்றார். காப்புச் செய்யுளிலேயே "ஆராவமுதின்

அருட்குடந்தை யென்பார்க்குத் தீராவினையெல்லாந் தீருமே" என்கின்றார். மேலும் 24, 47, 54, 89, ஆகிய பாடல்களிலும் "அமுது" என்றே அமைக்கின்றார்.

மற்றும் முறையாகவும், குருமுகமாகவும் நன்கு கற்றறிந்த புலமை உடையவர் என்பதை இவரது பாடல்கள் விளக்குகின்றன. பல இலக்கியங்களிலுள்ள கருத்துகள் பாடல்களில் புலப்படுகின்றன.

திவ்யப்பிரபந்தம் 82, பாகவதம் 62, கம்பராமாயணம் 49, திருவரங்கத்தந்தாதி 66, நளவெண்பா 71, 89, கந்தரந்தாதி 88, 92, பெரியபுராணம் 79, 93, திருப்புகழ்69, 72, ஆகிய நூல்களின் கருத்துக்கள், காட்டப் பெற்ற எண் உள்ள பாடல்களில் பொருந்தியிருக்கின்றன. இவ்வாசிரியருக்கு நல்ல இலக்கணப் புலமையும் உண்டென்று தெரிகிறது. விற்பூட்டணி, தற்குறிப்பேற்றவணி, முதலிய அணிகளும் பொருந்தியுள்ளன. இவ்வாசிரியரின் நல்ல திறம்பெற்ற புலமைக்குச் சிகரமாகப் பல பாடல்கள் உள்ளன. சில பாடல்களின் எண்கள் மட்டும் இங்கே தரப்பெறுகின்றன. அன்பர்கள் படித்துச் சுவைத்தருள்க. எண்கள் 77, 86, 93, 95.

சரஸ்வதி மஹால் நூலகர் ஸ்ரீ V. கோபால ஐயங்கார், M.A. அவர்கள் நல்ல நூலறிவோடு நுண்ணறிவும் படைத்து "மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதின் நுட்பம் யாவுள முன்னிற்பவை" என்ற திருக்குறளுக்கு உதாரணமாக விளங்கி வருபவர்கள். இந்நூலில் "கருத்தினன்" என்று தொடங்கும் 36 ஆம் பாடலுக்கு நான் எழுதியிருந்த உரை எனக்கே திருப்தியாக இல்லை உரைப்பகுயை அடியேனும் நூலகர் அவர்களும் படித்துக் கொண்டே வரும்போது "மங்கைமன்னன் திருத்திய

நாமம்" என்ற பகுதிக்கு உரிய உரையை இது வேறு விஷயம்; மங்கைமன்னன் ஆராவமுதல்ல, திருமங்கை மன்னன் என்று நூலகர் கூறியவுடன் என் சிறு புலமைக் கண் திறந்து மங்கை மன்னனைத் திருத்தின நாமமோ! ஓஹோ! நாராயணா என்னும் நாமம்! என்றுசொல்லி என் உள்ளத்தெழுந்த உவகைப்பெருக்கை ஒருவாறு வெளியிட்டுச் சொல்லிக் கொண்டேன். பல ஆண்டு களுக்குமுன் டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் அவர் களுக்கு, குடந்தை அரசினர் கல்லூரியில் மணிமேக லையைப் பதிப்பிக்கும் தருணத்தில், சில சந்தேகங்கள் ஒரு ஐயங்கார் மூலம் தெளிந்தபோது ஏற்பட்ட பெரு மகிழ்ச்சியை அடியேனும் பெற்றேன்.

அடியேனுக்கு இவ்வந்தாதியைப் பதிப்பிக்கும் உரி மையை அளித்தபோது கொடுக்கப்பெற்ற ஏட்டுச்சுவடி மிகவும் சிதைந்தும் பழுதுற்றும் இருந்தது. ஆயினும் மேற்குறிக்கப் பெற்ற நூலகர் அழகாக மூலத்திற்கு ஒரு நல்ல படி எடுத்து வைத்திருந்தார்கள். அதிலும் சில பாடற்பகுதிகளும் சொற்றொடர்களும் சிதைந்தேயிருந் தன வாதலின் சில பாசுரங்களுக்குத் திருப்திகரமாய்ப் பொருள்கூற இயலவில்லை. அவற்றுக்கு நூலாசிரியரின் கருத்து இவ்வாறிருக்கலாம் என்ற ஊகத்தளவிலேயே பொருள் கூறப்பட்டிருக்கிறது. பொருளைத் தீர்மானிக்க வகையில்லாத விடத்து, ஆராவமுதின் திருவருள் தோன்றாத் துணையாய் உள்ளிருந்து வழிகாட்ட, அத்திரு வருள் கிட்டிய அளவிற்கு ஒருவாறு செயல் நிறைவேற் றப்பட்டிருக்கிறது.

முற்றிலும் அல்லது பெரும்பாலும் பொருள்கொள்ள இயலாத சில பாட்டுக்கள், அவற்றிற்குரிய இடங்களிலில் லாமல் நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாய் அச்சிடப்

பட்டுள்ளன. இவ்வந்தாதியின் வேறு மூலச்சுவடிகளை வைத்திருக்கும் புண்ணியம் படைத்தோர் அவற்றை நூலகத்திற்கு உதவி, அடுத்த பதிப்பில் இக்குறைகளை நீக்கி, இந்நூலை வெளியிடுவதற்கு உதவுவார்களாயின் தமிழன்னையின் ஆசிக்கும், தமிழ் மறையைத் தந்தருளிய குடந்தைக் கிடந்தான் திருவருளுக்கும் பாத்திரமாவார்கள்.

தஞ்சை சரஸ்வதிமகால் நூல்நிலையத்தின் தமிழ்த் துறையிலுள்ள M. 139 எண்ணுடைய ஒரே ஓலைச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. இதற்குத் துணையாக சென்னை அரசினர் கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூலகத்தின் (Government Oriental Manuscripts Library) R. No. 587 கொண்ட 55 பாட்டுக்கள் மட்டுமடங்கிய சுவடியின் பிரதியெடுப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இப்பணியை அடியேனுக்கு நல்கியருளிய பாராட்டிற்கும் பணிதலுக்குமுரிய சரஸ்வதிமகால் கௌரவக் காரியதரிசி உயர்திரு O. A. நாராயணசுவாமி அய்யர் B.A., B.L., அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியதாகும்.

பன்மொழிப் புலமையும் மதிநுட்பமும் தெளிந்த அறிவுத் திறனும் வாய்ந்த நூலகர் வடமொழிப் பேராசிரியர் ஸ்ரீமான் கோபாலஐயங்கார் M.A., அவர்கள் இந்நூல் வெளிவர அடியேனுக்குப் பலவகையாலும் ஆக்கமும் ஊக்கமும் காட்டியமைக்கு மிகமிகக் கடமைப்பட்டுள்ளேன். ஆழ்ந்த நன்றியை அவர்களுக் குரித்தாக்குகிறேன்.

மூலையிருந்தேனை முற்றத்திழுத்து விட்டாற்போலே, சரஸ்வதி மகாலுடன் அடியேனுக்குத் தொடர்பை உண்டாக்கி இந்த அரும்பெருந் திருப்பணிக்கு ஆளாக்கி ஆராவமுதின் அருளுக்குப் பாத்திரமாக்கிய பெருமை சரஸ்வதிமஹால் சமஸ்கிருதத்துறைத் தலைவர் ஸ்ரீ N. S. தேவநாதாச்சாரியார் அவர்களையே சாரும். அவர்களுக்கு என் அகம்நிறைந்த நன்றி காட்டுங் கடப்பாடு உடையேன். மேலும், குடந்தை மகாத்மியம் முதலிய அரிய பெரிய செய்திகளை எனக்குக்கூறி பேருதவி புரிந்த வடமொழிப் புலவர் திரு N. S. தாத்தாச்சாரியார் அவர்களுக்கு என் நன்றி என்றும் நின்று நிலவுவதாக. இவ்வளவு சிறப்புடன் இந்நூல்வெளிவர அவ்வப்போது நிர்வாக முறையிலும் நட்புமுறையிலும் நூலை ஒப்புநோக்கியும் ஆவனசெய்துதவியவர் சரஸ்வதி மஹால் தமிழ்த் துறைத் தலைவர் வித்துவான் வீ. சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள். அவர்கட்குப் பலவாறு நன்றி கூறுவது என் கடமையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, அடியேனையும் ஒரு பொருட்டாகத் திருவுளம்பற்றித் தொண்டு கொண்ட ஸ்ரீ ஆராவமுதின் திருவடிக்கமலங்களைச் சிரந் தாழ்த்திக் கைகூப்பி வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்
2—3—68

S. இராமலிங்கம்பிள்ளை
ஒய்வுபெற்ற தமிழாசிரியர்.

# குடந்தையந்தாதி

## கடவுள் வாழ்த்து

(திருமால் வாழ்த்து)

1. கரதலந் தாமரைக் கண்கள்செந்
 தாமரைக் காமனுந்திப்
பரதலந் தாமரைப் பாதமுந்
 தாமரைப் பண்ணடங்கப்
*பொருதடந் தாமரைப் பொற்கைசெந்
 தாமரைப் பொற்குடந்தை
மரகதந் தாமரை மார்புஞ்செந்
 தாமரை மாயனுக்கே !

(பொழிப்புரை) உலகத்து உயிர்கள் உணர்ந்து கொள்ள இயலாத காரியங்களைச் செய்கின்றவனும், திருக்குடந்தையில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய திருமாலுக்கு (ஆராவமுதப் பெருமானுக்கு) திருக்கரங்கள், கண்கள், கொப்பூழ், பாதங்கள், புயங்கள், கைகள், (கோமளவல்லி நாச்சியார் தங்கியுள்ள) மார்பகம் ஆகிய அவயவயங்கள் எல்லாம் தாமரைப் பூக்களாகவே காட்சி அளிப்பனவாம்.

(குறிப்புரை) மூலத்தில் இச்செய்யுள் முதலில்.........லந் தாமரை எனக் காணப்படுகின்றது. முதல் மூன்று எழுத்துக்களும் சிதைந்து விட்டன. ஈங்கு "கரதலந் தாமரை" என்றிருப்பதே பொருத்தம்.

கரதலம் முன்னே கூறப்பெற்று விட்டமையால் பொற்கை என்ற இடத்துப் "பொய்கை செந்தாமரை" என்றிருத்தல் கூடும்

---

* "பொருதலந்தாமரை" என்ற பாடமே சிறப்புடையதாகும்.

## திருமகள் வாழ்த்து

2\. சேலுஞ்செந் தாமரை சொர்ணசெந்
தாமரை சேர்ந்துறைந்த
மூலுஞ்செந் தாமரை மூரல்செந்
தாமரை முத்திதருங்
கோலுஞ்செந் தாமரை கொங்கைசெந்
தாமரை கோகனகக்
காலுஞ்செந் தாமரை கையுஞ்செந்
தாமரை காரணிக்கே !

(பொ-ரை) எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக இருக்கின்ற திருமகளுக்கு (கோமளவல்லித் தாயாருக்கு) பொற்றாமரைக் குளத்தில் அவதரிப்பதற்கு மூலத்தான மாய் இருந்ததும், சேல்மீன் போன்ற வடிவுடைய கண் களும், வாயும், வீட்டின்பத்தைத் தருவதற்கு ஏதுவாகக் கையில் ஏந்தியிருக்கின்ற செங்கோலும், கொங்கை களும், பொன்னிறம் பொருந்திய பாதங்களும் கைகளும் செந்தாமரைப் பூக்களே.

(கு-ரை.) மூல்-மூலம் என்ற சொல்லின் திரிபு. மூரல் என் பது பற்கள் என்ற பொருளை உடையது. பற்களுக்குத் தாமரைப் பூவை உவமை கூறுவது மரபு அன்றாதலின் ஆகுபெயராக வாயை உணர்த்திற்று எனக்கொள்க.

## ஆராவமுதன் வாழ்த்து.

3. *ஆரா வமுதி னருட்குடந்தை யென்பார்க்குத்
தீரா வினையெல்லாந் தீர்க்குமே — பாராளு
மாமகளுந் தாள்வருட வானவரும் வந்திறைஞ்சத்
தாமரைச்செங் கண்வளர்வோன் தாள்.

(பொ-ரை) பூதேவியும் சீதேவியும் ஆகிய உபய நாச்சியார்கள் திருப்பாதங்களை மெல்லெனத் தடவவும், தேவர்கள் வந்து வணங்கவும், தாமரைப் பூப்போன்ற கண்களாலே தூங்குவான் போன்று காட்சியளித்து அறிதுயிலுடன் பள்ளிகொண்டிருக்கின்ற பெருமானுடைய பாதங்கள், ஆராவமுதப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்குடந்தை என்று தலத்தின் பேரைச் சொல்லுகின்றவர்களுக்குத் தீரா வினைகளையெல்லாம் தீர்த்துவிடும்.

(கு-ரை) பாதங்கள் தீர்க்கும் என வினை முடித்துக் கொள்க. அவன் எழுந்தருளியிருக்கின்ற தலத்தின் பெயரைச் சொன்ன அளவிலேயே அவன் தாள்கள் தீரா வினையெல்லாம் தீர்க்கும் என்றால் அவன் திருநாமங்களைச் சொன்னால் எப்பேறு பெறுவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

மூலத்தில் ஈற்றுச்சொல் 'தாள்' என்றும் 'தான்' என்றும் கொள்ள இடமிருக்கிறது. எனினும் 'தாள்' என்ற பாடமே சிறந்ததாகக் கொள்ளப் பெற்றது.

---

* இச்செய்யுள் நமது சரசுவதி மகால் சுவடியில் இல்லை. சென்னை, O. M. L. நூலகத்துச் சுவடிப் படியில் இச்செய்யுள் ஒன்றே காப்புச் செய்யுளாகக் காணப்படுகிறது. இதுவும் பல விடங்களில் சிதைந்தும் உருமாறியும் காணப்படுகின்றது.

# நூல்

1. ஆரணத் தந்தத்து மன்னை
யசோதை கரத்துமன்னைக்
காரணத் தந்த வனத்து
மலர்வன கஞ்சன்விட்ட
வாரணத் தந்த முரித்தோன்
குடந்தையின் மாமறைநூல்
பூரணத் தந்தணர் போற்றும்
பிரானடிப் போதுகளே !

(பொ-ரை) கஞ்சனால் ஏவப்பட்ட யானையின் கொம்புகளை முரித்தவனும், குடந்தையில் வாழ்கின்றவர்களும் பெருமை பொருந்திய வேதங்களின் ஞானங்களால் நிரம்பப் பெற்றவர்களுமான அந்தணர்களால் பாடித் துதிக்கப் பெறுபவனுமாகிய பெருமானுடைய பாதங்களாகிய மலரும் பருவத்தரும்புகள், வேதங்களின் முடிவிலும் அன்னையாகிய அசோதையின் கைகளிலும் மற்றொரு அன்னையாகிய கைகேயியின் வரங் காரணமாக அந்தக் காடுகளிலும் மலர்வனவாம்.

(கு-ரை) "அசோதை கரத்துமலர்வன", என்பது கிருஷ்ணவதாரத்தில் அவளது கைகளிலும் மார்பகத்தும் மடிமீதும் பாதங்கள் நன்கு பட்டமையைக் காட்டுகிறது.

"வனத்தும் மலர்வன" என்பது பதினான்கு ஆண்டுகள் இராமாவதாரத்தில் காட்டுப் பகுதிகள் பலவற்றில் நடந்தமையைக் குறிப்பதாகும். "போது—மலரும் பருவத்தரும்பு ஆகலான்" அப்போது மேற் சொல்லப்பெற்ற இடங்களில் மலர்ந்து தோன்றிற்று.

2. போதனு மானு மழுவுந்
தரித்துப் புரிந்துநடப்
பாதனு மானும் பதந்தரு
வானும் பகைத்தவர்பால்
தூதனு மானும் மறலியும்
போமென்று சொற்றவள
மாதனு மானும் குடந்தையி
லேகண் வளர்ந்தவனே!

(பொ-ரை) பிரமனாக விருப்பவனும், மானும் மழுவும் கைகளிலே தரித்து நடனத்தை விரும்பி ஆடுகின்ற சிவனாக இருப்பவனும், காமதேனு கற்பகதரு இரண்டையுமுடைய இந்திரனாக விருப்பவனும், பகைமையை ஏற்படுத்திக் கொண்ட இராவணனிடம் தூதாக அனுமனையும் (அழிக்க) இயமனையும் செல்லுங்கள் என்று சொல்லிய வளமை தங்கிய வில்லாளனாகிய இராமனாக விருப்பவனும் குடந்தையில் அறிதுயில் கொள்பவனே யாம்.

3. வளரிக்கு நெல்லும் பசும்பூ
கமுந்தம்மில் மாறுகொண்டே
கிளரிக் குடந்தைக் கிடந்தவனே
கேச வாவெனவே
முளரிக் குளக்கய முன்னு
ளழைக்கமுன் வந்துநின்று
யுளரிக்கு மைவர்குற் றேவலை
யானென் றொழிவதுவே!

(பொ-ரை) கரும்பும், நெற்பயிரும், பாக்கு மரங்களும் தங்களுக்குள்ளே முந்திக்கொண்டு வளர்ந்து வருகின்ற குடந்தையில் எழுந்தருளியிருப்பவனே! கேச

வனே என்று சொல்லி, தாமரைகள் பூத்துள்ள குளக் கரையிலிருந்து அன்று ஒரு யானை அழைக்க, உடனே அதன் முன் வந்து நின்றவனே! என்னோடிருந்து கொண்டு துன்பத்தை யுண்டாக்குகின்ற என் ஐம்பொறி கள், என்னை அடிமையாக்கி ஆட்டிவைக்கின்ற நிலையி னின்றும் என்று ஒழியப் பெறுவேன்?

4. ஒழிவன வாச நவதீர்த்த
 யாத்திரை யோமமிவை
யிழிவன யானத் திருப்பன
 செய்முத்தி யெட்டெழுத்து
மொழிவன பாவி மனமே
 யுரகன் முடியளவுக்
குழிவன வாவிக் குடந்தைப்
 பிரானடி கூடுதற்கே!

(பொ-ரை) பாவிமனமே! ஆதிசேடனுடைய தலை வரை சென்றிருக்கின்ற ஆழமுடைய நீர்நிலைகள் சூழ்ந் துள்ள குடந்தையில் எழுந்தருளியிருக்கின்ற பெருமா னுடைய திருவடிகளைச் சென்றடைய வேண்டுமாயின், அதற்கு ஒழியத் தக்கன யாவையெனின், காடுகளிலே சென்று கடுந் தவம் புரிவதும், தீர்த்த யாத்திரை போவ தும், வேள்விகள் இயற்றுவதும், இழிவான தியானத் திலமர்வதுமேயாம். மொழியத் தக்கனயாவையெனின் முத்திதரும் சக்தி வாய்ந்த திரு. எட்டெழுத்துக்களு மேயாம்.

(கு-ரை) அவன் திருவடிகளை அடைவதற்குத் தவம் முத லியன வேண்டா; அவன் திருநாமம் பேசுதல் ஒன்றேயமையும் என்பது.

5. கூடும் படிவிட் டுயருல
கேறக் குறித்தடியேன்
தேடும் படியினித் தேடுகிலேன்
திரைக் காவிரிநீர்
ஊடும் படிக்கும் குடந்தையில்
மேகம் உணர்ந்துதன்னை
நாடும் படிக்கிரு நாராய
ஞவென நாத்தந்ததே !

(பொ-ரை) அலையுடன் கூடிய கடலானது காவிரியுடன் ஊடல் கொள்ளவும், கார்மேகங்கள் இங்கே குழுமியுள்ளன என்று விரும்பி வான்மேகங்கள் தன்னிடம் வரும்படியாகவும், இக்குடந்தைப்பதியில் நாராயணனாக எழுந்தருளியிருப்பாயாக என்று என்நா என்னையுமறியாமல் கேட்டுக் கொண்டு விட்டது. ஆதலால், இப்பொழுது வசித்து வருகின்ற இந்தத் திருக்குடந்தையை விட்டுவிட்டு உயர்ந்த உலகத்திற்குச் செல்ல எண்ணித் தேடி யலையமாட்டேன்.

6. * * * * *

7. புரந்தர னோரனை புண்டரீ
கத்தயன் போற்றமுன்ன
ளிரந்தர னேதமு ருமல்வைத்
தோயெயில் சூழ்குடந்தை
நிரந்தர னேசங்கும் நேமியுஞ்
செங்கையி லேந்திவந்தோர்
வரந்தர வோடின யென்பவ
மாகிய மாயங்களே !

(பொ-ரை) இந்திரனும், தாமரையாதனத்தில் வீற்றிருக்கின்ற பிரமனும் பாராட்டும் வண்ணம் சிவன் மயக்கமுற்று இரந்து (யாசித்துத்) திரியாதவாறு செய்தாய். மதில்களால் சூழப்பெற்றுள்ள குடந்தையில் என்றும் எழுந்தருளியிருப்பவனே! சங்கையும், சக்கரத்தையும் சிவந்த கைகளிலே தரித்துக் கொண்டு வந்து எனக்கு ஒரு வரத்தைத் தந்ததனுல் என் பிறப்பாகிய மாயச் செயல்களெல்லாம் பறந்தோடிவிட்டன.

8. மாயங் களேயுமைம் பூதங்க
ளோடு வகுத்தவஞ்சக்
காயங் களேயும்நின் சேவடி
யேகடற் காவிரிநீர்
தோயங் களேயு மறந்திசை
யோடளி சூழ்குடந்தை
நீயங் களேயும் தயிர்க்கன்னே
டாலஞ்சி நின்றனவே !

(பொ-ரை) நின்பாதங்கள் பலமாயங்கள் செய்வதையும், ஐம்பூதங்களின் பரிணமத்தால் உண்டாகிய வஞ்சக உடல்களேயும், கடல் நீர், காவிரி நீர் இவைகளேயெல்லாம் மறந்துவிட்டு இசை பாடுகின்ற வண்டுகள் சூழ்ந்துள்ள குடந்தையிலே நீ இடைச்சியர்களின் வீடுகளில் தயிரைக் கைகளால் அளேந்துண்ட செயலே அன்னே யசோதை கடிந்துரைத்துத் தண்டனே தர அதற்கு அஞ்சி அங்கே நின்றன.

(கு ரை) பாதங்கள் அஞ்சிநின்றன என முடிக்க.

9. நின்றன வேதநின் பாதம்
பிறவியின் நீள்பசியால்
சென்றன வேதனை யார்கொலுற்
றார்திருப் பாற்கடலுண்
மன்றன வேத வழிமாறு
பாவமும் வையகமேல்
கொன்றன வேதமும் போம்பொன்னி
சூழுங் குடந்தையிலே !

(பொ-ரை) (ஆராவமுதனே !) நின் பாதங்கள் வேதங்களினுச்சியில் நின்றன. பின்னும் பின்னும் பிறந்து எவ்வெவர் துன்பப்படுகிறார்களோ, அவ்வவர்கள் பால் பிறப்பொழிக்கச் சென்றன. திருப்பாற்கடலில் நிலைபெற்றிருந்தன. இந்தவுலகத்தில் எல்லாத் துன்பங் களையும் போக்கவல்ல குடந்தையிலேயிருந்து, வேதம் சொல்லுகின்ற வழிகளினின்று தவறி நடக்கின்றவர் களுடைய பாவங்களைக் கொல்லுகின்றன. (போக்கு கின்றன.)

10. குடந்தையி லையா யுதத்திரு
வானமின் கோகனக
மடந்தையி லாயுத வாருண்டு
நீயன்றி வாதபித்தம்
நடந்தையி லாயுத கந்தழல்
கால்வெளி ஞாலமென்னைக்
கடந்தையி லாயுத காலனென்
மேல்வருங் காலத்திலே !

(பொ-ரை) குடந்தையில் எழுந்தருளியிருக்கின் றவனே! ஐந்து ஆயுதங்களையுடையவனே! பொற்று மரையிலே பிறந்தவளாகிய திருமகளைத் துணைவியாக உடையவனே ! வாத, பித்த, சிலேட்டுமங்கள் தடுமாறி

நடக்க, ஐம்பூதங்களும் என்னைக் கடந்துவிட, ஆயுதத்தையுடைய இயமன் என்மீது அடர்த்து வருகின்ற காலத்தில், எனக்குதவ நீயன்றி வேறு யாருண்டு ?

(கு-ரை) ஐந்து ஆயுதங்கள் : வில், வாள், சங்கு, சக்கரம், தண்டு. ஐம்பூதங்கள் : நீர், தீ, வெளி, மண், காற்று.

11. காலத்தி லத்தனை நீதரி
லோதக் கடலுடுத்த
ஞாலத்தி லத்தனை யேன்பிறப்பே
னல்ல தாமரைச்செங்
கோலத்தி லத்தனை யாகத்த
னேகும்ப கோணத்திலால்
மூலத்தி லத்தனை வெஞ்சாப
மாற்றிய முன்னவனே !

(பொ-ரை) தாமரைப்பூவில் காட்சியளிக்கின்ற நின்ற திருக்கோலத்தில் சிவனை ஒரு பாகத்தில் உடையவனே! கும்பகோணத்தில் எழுந்தருளியிருந்து கல்லால மரத்தின் அடியில் அமர்ந்திருக்கும் சிவனடைந்திருந்த கொடிய சாபத்தை மாற்றியவனே! நீ உரிய காலத்தில் ஒரு சற்குருவை எனக்குத்தந்திருந்தால், நான் ஏன் இத்தனை பிறவிகள் எடுத்திருக்க வேண்டும் ?

12. முன்னவ னித்தன் முராரி
புராரி முளரிப்பிரான்
மன்னவ னித்தன் மாயோன்
குடந்தையில் வள்ளலெண்ணூர்
தென்னவ னித்தந் திருநாம
மோதினர் சிந்தையுள்ளா
ரென்ன வனித்தரி லாரோ
வுலகத் திருப்பவரே !

(பொ-ரை) உலகத் தோற்றத்திற்கு முன்னுகவுள் ள்வன்; என்றும் அழியாதவன்; ‘ முரன் ’ என்ற அசுரனை அழித்தவன்; திரிபுரம் எரித்த சிவனுக்கும், தாமரையில் தோன்றிய பிரமனுக்கும், இந்திரனுக்கும் தலைவன்; என் றெல்லாம் அவ்வழகனது திருநாமங்களை நாடோறும் சொல்லுகின்றவர்களுடைய வுள்ளத்திலிருந்து விடுவான் என்றறிந்த பின்னும் இவ்வுலகத்திலழியும் இயல்புள்ள எவர்தாம் அவ்வள்ளலை எண்ணுதிருப்பார்கள் ?

13. இருப்பவ ரந்தர வீருக
சக்கரத் திருபதுகை
பொருப்பவ ரந்தரை வென்றவில்லார்
பொன்னி சூழ்குடந்தை
விருப்பவ ரந்தர வேங்கட
மேவி வெறுங்கைநின்று
பெருப்பவ ரந்தர வல்லார்
செல்லாததெம் பேதைமையே !

(பொ-ரை) பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்க வரத்தைத் தந்திருக்கவும் (அதனைப் பெற்றிருந்தும்) கர்வத்தினுல் வியூகம் பலவற்றை அமைத்துக்கொண்டு, இருபது கைகளுடன் போர்புரிய வந்த விராவணனை, புகழ்பெற்ற அவ்விலங்கையிலே அழித்த வில்லையுடைய வன் ; காவிரி சூழ்ந்துள்ள குடந்தையை விரும்பி எழுந் தருளியிருப்பவன் ; அவனுக் குரியதும் விண்ணளவு முயர்ந்துள்ளது மாகிய திருவேங்கட மலைக்குச் சென்று நாம் வெறுங்கையுடன் நின்ருலும் மிகுந்த வரங்களை அளித்தருள வல்லவன். அவற்றைப் பெற ஆங்குச் செல்லாதிருப்பதற்குக் காரணம் நம் அறிவின்மையே யாகும்.

(கு-ரை) பிரமனை நோக்கி இராவணன் தவமிருந்து தனக்கு இந்திராதி தேவர்களால் அழிவு ஏற்படக் கூடாதென்று வரம் பெற்றது ஈண்டு குறிப்பிடப்பட்டது.

14. பேதமை யாமுத்தி தன்னினும்
வேண்டுமப் பேதமென்றல்
தீதமை யாலருட் பாதம்பெற்
றேன்றிருப் பாற்கடலோ
யேதமை யானன ஞன்முகன்
மாமறை யமுனைபொன்னி
கோதமை யாதி பகீரதி
சூழ்கும்ப கோணத்தனே !

(பொ-ரை) பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவனே ! தங்களுக்குண்டான துன்பங் காரணமாக ஐந்து முகங்களையுடைய சிவனும் நான்முகனும் வேதங்களும் யமுனையும் காவிரியும் கோதாவரியும் ஆதிகங்கையும் சூழ்ந்து வந்திருக்கின்ற கும்பகோணத்தில் எழுந்தருளியருப்பவனே ! இம்மையினின்று மாறுதலாகிய வீட்டுலகைப்பெறுதலினும் அப்பேதம் வேண்டுமென்று கருதப்பட்டால் அக்கருத்திற்கு ஏற்ப நான் தீமையே செய்தும் உன்னுடைய திருவருள் சுரக்கும் பாதங்களைப் பெற்றேன்.

15. கோணத்த நேர்வழி போவார்
விழும்பொய்க் குழிகளுநீ
காணத்த னேவந்து கைதரு
வாய்கரு ணகரனே !
வாணத்து நேமிவிற் றண்டாய
வாயுதம் வல்லவனே !
தூணத்த னேகும்ப கோணத்
தராவில் துயில்பவனே !

(பொ-ரை) கருணைக் கிருப்பிடமானவனே ! வாள் சங்கு சக்கரம் வில் தண்டு ஆகிய ஆயுதங்களைச் செலுத் தலில் வல்லவனே ! தூணிலே நரசிங்க வடிவமாய்த் தோன்றியவனே ! கும்பகோணத்தில் அரவணையில் துயில்பவனே ! நல்ல நெறியென்று கருதிக் கொண்டு தீயநெறியாகிய பொய்க் குழிகளிலே விழும்போது, அங் கும் வந்து கைகொடுத்துக் கரையேற்றிக் காத்தருளல் வேண்டும்.

(கு-ரை) பொய்க்குழியாவது குழிபறித்து அதனுள் முள் முத லியன இட்டுவைத்து, மேலே தரையென்று எண்ணுமாறு மூடி வைக்கப் பெறுவது. பகைவரைக் கவர இவ்வாறு செய்வது வழக்கம். யானை பிடித்தற்கு இவ்வாறு செய்வது பெருவழக்கு.

16. துயிலும் பணியும் வளர்த்து
மழித்துந் தொடுகடற்பா
ரயிலும் பணியும் அயன்சேர்
குடந்தையி னுயனுமாய்
மயிலும் பணியும் மணியா
னிரையும் மறப்புலியும்
பயிலும் பணியும் திருக்குழ
லால்தரும் பார்கடற்கே !

(பொ-ரை) குடந்தையில் பிரமனால் பூசிக்கப் பெறு கின்ற பெருமான் துயிலுந் தொழிலிலும், கடலால் சூழப் பெற்றுள்ள வுலகத்தைக் காத்து, அழித்து உண்ணுந் தொழிலிலும் வல்லவன். மேலும், ஆயனாகிக் குழல் ஊதி அத்திறத்தாலே ஒன்றோடொன்று பகைமை கொண் டுள்ள மயிலையும் பாம்பினையும், பசுவினங்களையும் புலி யினங்களையும் ஒருசேரப் பயின்று வாழுமாறு இவ்வுலகத் திலே செய்து காட்டுவான்.

(கு-ரை) "ஆயனுமாய்க் குழலால் தரும்" என முடிக்க, 'கடற்பார்' என்பது 'பார்கடல்' என்று முன்பின்னாகத் தொக்கது.

17. கடற்கே கயமும் நிலமானும்
போற்றுநின் காற்கொருபோ
திடற்கே கயவர் நினைந்துய்
கிலாரிரு போதுந்தத்தங்
குடற்கே கயவனங் கொண்டிர
வாநிற்பர் கோகனக
மடற்கே கயவனஞ் சூழ்கும்ப
கோணத்து மாதவனே!

(பொ-ரை) செந்தாமரைப் பூவின் மடல்களிலே பெருமை பொருந்திய அன்னங்கள் ஒதுங்குகின்ற குடந்தையிலே வீற்றிருக்கின்ற மாதவனே! கடலிலே தோன்றிய திருமகளும், பூதேவியும் வருடிப் பேணுகின்ற நின் திருவடிகளிலே ஒரு பூவையிட்டுக் கடைத்தேறுவோம் என்று நினைக்க மாட்டார்கள் கயவர்கள். ஆனால், இரு வேளையும் சென்று தங்கள் வயிற்றுக்குப் பெருஞ் சோற்றையிரப்பார்கள்.

(கு-ரை) ஒருபோது இடாதவர்கள் இருபோது இரப்பார்கள் என்பது நயம்.

18. மாதவ னச்சுதன் மாயன்
முராரி வரதகண்ணன்
போதவ னச்சு தனத்தன்
பிரான்பொன்னி சூழ்குடந்தை
யாதவ! னச்சுத கத்தடத்
தாடிய வின்னமுத
வோதவ னச்சுத னையனென்
பார்க்குண் டுறுகதியே!

(பொ—ரை) " திருமகள் கணவன். அண்டினேரை நழுவவிடாதவன். நம்மால் புரிந்துகொள்ள வியலாத செயல்களைச் செய்பவன். முரனை அழித்தவன். வேண்டியவற்றைக் கொடுப்பவன். கருநிறத்தன். மலரவனை (பிரமனை) மகனுக வுடையவன், கையில் சங்கேந்தியிருப்பவன், தலைவன், காவிரியால் சூழப்பெற்ற குடந்தையில் கோயில் கொண்ட கண்ணன். (அப்)பொற்றாமரைத் தீரத்தில் அவதரித்த கோமளவல்லி நாச்சியாரின் இன்பமாகிய அமுதத்தைத் துய்ப்பவன் " என்றெல்லாம் சொல்லுகின்றவர்களுக்குப் பரமபதம் உறுதியாகவுண்டு.

19. உறுகதிக் குத்தளர் கின்றோர்க்
கமையு முறிநெயுண்டோர்
மறுகதிக் குத்தர னென்னனின்
ருய்மல ரோடுசெந்நெ
லறுகதிக் குத்தள ராமே
குடந்தையி லாரமுதே
தெறுகதிக் குட்பொதி மண்பா
லைம்பூதச் செருக்கறவே !

(பொ—ரை) மறுமைப்பேறு அடையவேண்டுமென்று கருதி யுள்ளமழிகின்றவர்களுக்கு அதனையளிப்பதற்காக அவர்களில்லங்களிலேயுள்ள நெய்யினையுண்டு மறுகதி கிடைக்குமென்பதற்கு உத்தரவாதியாக விளங்குகின்றாய்.

(கு—ஊ.ர) இச்செய்யுளின் பின்னிரண்டடிகளும் பொருள் முடிவுக்கு ஏற்ப வரவில்லை.

20. செருக்கா லயர்ப்பினு மாரா
வமுதின் திருக்குடந்தை
யொருக்கால் நினையு மிருக்கால்
மொழியு மொழுகுகங்கைப்

பெருக்கா லமரும் பெருமான்
பெறவிப் பிரமன்பெற்ற
மருக்கால் வனச மலர்த்தாள்
வருநும்* மரணத்திலே !

(பொ-ரை) ஆராவமுதன் எழுந்தருளியிருக்கின்ற திருக்குடந்தையை இதுகாலம்வரை உங்கள் செருக்கு காரணமாக மறந்திருந்தாலும் இனியாவது ஒருமுறை நினையுங்கள். வேதமோதிப் போற்றுங்கள் அங்ஙனஞ் செய்வீர்களாயின் கங்கை யொழுகுகின்ற சடையுடன் கல்லால மரத்தினடியிலமர்ந்திருக்குஞ் சிவபெருமானை மகனைப்பெற்ற பிரமனைத் தன் பிள்ளையாகப் பெற்ற அப்பெருமானது தாமரைப் பூப்போன்ற பாதங்கள் நுங்கள் மரணவேதனையில் வந்து காக்கும்.

21. மரணங்க ளுன்கற வைக்குநின்
பாதங்கள் வந்தெனந்தக்
கரணங்க ளுன்கையும் கொள்வதென்
றேகரு தாதவருக்
கரணெங்க ளாதியென் றூரணம்
போற்றவு மண்டர்தொண்டர்
திரணெங்க ளாத வெனவுங்
குடந்தையிற் சேர்பவனே !

(பொ-ரை) பகைவர்களுக்கும் பாதுகாவலாயிருப்பவன் எம்முதல்வன் என்று வேதங்கள் போற்றவும், தேவர்களும், ஆழ்வார்களும் எங்கள் தலைவன் என்று சொல்லவும், திருக்குடந்தையி லெழுந்தருளியிருப்ப

---

*' வரினும் ' என்று மூலத்தில் உளது.

வனே! நான்கு வகையான மரணங்களும் என்னை யணுகாவண்ணம் வகைசெய்கின்ற நின்பாதங்கள் என்னிடம் வந்து என் அந்தக்கரணங்கள் நான்கையும் தமதாக வசப்படுத்திக்கொள்வது, என்று நிகழுமோ அறியேன்.

(கு-ரை) மரணங்கள் நான்கு; ஐம்பூதங்களில் ஆகாயம் தவிர்த்து மற்றைய நான்கினுலும் ஏற்படுவது. அந்தக் கரணங்கள் :—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

22. * * * * *

23. * * * * *

24. கூடுகை யாமல் வாவிசெல்
லாமல் குருகைப்பிரான்
காடுகை யாம லருளிய
வேதச்சொல் காவிரிநீ
ராடுகை யாம லமுதங்
கிடந்த வருட்குடந்தை
நாடுகை யாமல் வருமோ
மனமே யந்தநற்பதமே!

(பொ-ரை) உடலைவெறுக்காமலும், உயிர் செல்லா முன்பும், பின்னும் பின்னும் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லாவண்ணம் ஆழ்வார் பாசுரங்களால் பாராட்டப் பெற்ற காவிரியில் நீராடாமலும் ஆராவமுதன் பள்ளி கொண்டிருக்கும் அருட்குடந்தையாகிய திவ்விய தேசத்தைச் சென்று வணங்காமலும் இருந்தால் மனமே அந்த வைகுந்தலோகம் தானே வருமோ?

25.

26. சித்தத் திருக்குந் திருமா
லுமக்கிருந் தாலென்சித்த
பித்தத் திருக்கு நினைக்க
வொட்டாதுமை பேரொலிநீ
ரத்தத் திருக்கு முழங்குங்
குடந்தையில் நாதவென்று
மத்தத் திருக்கு விடுமோ
நடுவுங்கள் வல்வினையே!

(பொ-ரை) உங்கள் உள்ளத்திலே திருமாலிருந்தும் உங்களுக்கென்ன பயன்? உலகப் பற்றுகொண்ட உங்கள் சித்தம் அவனை நினைக்கவிடாது. "பொருள் பொதிந்த இருக்கு வேதங்கள் தீர்த்தங்கள் தோறும் முழங்குகின்ற குடந்தையின் தலைவனே!" என்று சொல்லாத மயக்கவறிவும் மாறுபட்ட மனமும் உங்கள் தீவினையைப் போக்கும் வன்மையுடையனவா? (இல்லையே!)

27. வல்வினை யானவை நீக்குவ
தந்தணீர் வாருமுங்கள்
கல்வினை யாகிய வேதா
கமமல கார்க்கடலுள்
செல்வினை யாவகை தென்னிலங்
காபுரி தீயெழத்தன்
வில்வினை யாலழித் தான்கும்ப
கோணம் விடாதிருமே!

(பொ-ரை) அந்தணர்களே! இங்கே வாருங்கள். உங்கள் தீவினையைப் போக்குவது உங்கள் முயற்சியினால் கற்ற வேதங்களும் ஆகமங்களுமல்ல. தன்வில்லின் காரியத்தால் தென்னிலங்கை மாநகரம் தீப்பற்றியெறியுமாறு அழித்தவனுடைய கும்பகோணத்தை

விடாது, உங்கள் வல்வினை தொலையுமாறு தங்கித் தரிசியுங்கள்.

28. விடாதிரு மிக்குஞ்சி பஞ்சாய்
வெளுத்து வளைந்துமுன்னு
ளிடாதீரு மிக்குந் தவிட்டுக்கு
மேங்கிநிற் பீரதால்சென்
றடாதிரு மிக்கும்ப கோணத்தி
லேசென் றடையுமும்மை
கெடாதிரு மிக்குயர் வைகுந்த
நாடு கிடைக்குமென்றே !

(பொ-ரை) முன்பிறப்பில் பிறர்க்கு ஈயாதவர்களே ! இடைவிடாமலிருமிக்கொண்டும், தலைமயிர் பஞ்சுபோல் வெளுத்தும், உடல் வளைந்தும் இப்பிறப்பில் ஆங்காங்கு உமியுந் தவிடுங்கூட சென்று யாசிப்பீர் ! (இந்நிலைதீர) அடுத்த பிறவியிலழியாத பெருஞ் செல்வமாக இருக்கின்ற வைகுந்தலோகங் கிடைப்பது உறுதியென்றெண்ணிக் கும்பகோணத்திலே சென்று விடாமல் தரிசியுங்கள்.

29. கிடைக்குமன் றேயினி தென்றுதென்
றில்லைக் கிடந்தவன்பூந்
தடைக்கு மன்தேர்விச யன்றனிச்
சாரதி தந்தவன்பார்
படைக்குமன் றேதொட்டு மின்றள
வாகப் படைத்தெமைக்கை
துடைக்குமன் றேயினி நாங்கும்ப
கோணந் தொழுதனமே !

(பொ-ரை) தில்லைச் சித்திரக்கூடமே இன்பம் பயப்பதென்று பள்ளிகொண்டிருப்பவன் ; குதிரைகள்

பூட்டிய அருச்சுனன் தேருக்குச் சாரதியாகச் சென்றவன்; உலகத்தைப் படைக்கத் தொடங்கிய வன்றுமுத லின்று வரை என்னையும் படைத்துக்கொணடே வருகின்றவன், இனியாவது என்பிறவியை அழித்துவிடுவான் என்ப துறுதி, ஏனெனில் கும்பகோணத்தைத் தொழுது விட்டேன்.

30. தொழுதிக் களிவண்டு சூழுந்
துழாய்முடித் தோன்றலையான்
புழுதிக் கழியு மழகுடை
யானை புலத்திளைஞர்
கொழுதிக் கழியு மணிகால்
குடந்தையிற் கோவையுள்ளத்
தெழுதிக் கழியவிட் டேன்பிற
வாநெறி யெய்துதற்கே !

(பொ-ரை) களித்துங் கூட்டங்கொண்டும் வண்டுகள் மொய்க்கின்ற துளவமாலையைத் தரித்துள்ள திருமுடியையுடைய பெருமானை, தன் கொம்புகளால் புழுதியை விரும்பிக் குத்திக் களையும் அழகுள்ள யானை, வயலிலேயுழுகின்ற இளைஞர்களின் கொழுமுனைக் குடைந்து தூளாகுமாறு முத்துக்களை யுதிர்க்கின்ற குடந்தையின் பேரரசனை, நான் வீட்டுலகை யடையும் பொருட்டு உள்ளக்கிழியி லுருவெழுதி என் தீவினையைப் போக்கிக் கொண்டேன்.

(கு-ரை) புழுதி பொதிந்துள்ள புதர்களிலே யானை கொம்புகளால் குத்த, அப்பொழுது கொம்புகளிலிருந்து உதிர்ந்த முத்துக்கள் வயல்களிலே தெறித்துவிழ, அவைகள் உழவர்கள் உழுங்காலத்து ஊறியுடைகின்றன.

முத்துக்கள் பிறக்குமிடங்களாகத் தொகுத்துக் கூறப்பெற்றவற்றுள் யானைக் கொம்பும் ஒன்று.

பாட்டு

தந்திவராக மருப்பிப்பிபூகந் தழைகதலி
நந்து சலஞ்சலமீன் றலைகொக்கு நளினமின்னார்
கந்தாஞ்சாலி கழைகன்னலா வின்பல்கட் செவிகார்
இந்துவுடும்பு கராமுத்தமீனும் இருபதுமே !

31. எய்துகைக் கும்பத மெப்போது
நல்குவ தேந்திழையார்
வய்துகைக் கும்பத மாய்வளர்ந்
தேன்வய லேருழவர்
செய்துகைக் கும்பதம் பூமண
நாறுந் திருக்குடந்தை
வெய்துகைக் கும்பதம் தீங்குற்ற
போதுசெல் வித்தகரே !

(பொ-ரை) வயல்களில் உழுகின்றவர்கள் செய்களை நன்றாகத் துவைப்பதனால் அவர்களது பாதங்கள் தாமரைப்பூக்களின் மணம் வீசுகின்ற சிறப்புடைய குடந்தையில் எழுந்தருளியுள்ள பெருந் திறமையுடையவனே! நற்பருவ மங்கையர் என்னைக் கண்டு ஏசி வெறுக்கும் நிலையில் வளர்ந்துவிட்டேன். நான் உன் திருவடிகளைச் சேரும் பதத்தை எப்பொழுது அளித்தருளுவாயோ ? அறியேன் !

(கு,ரை) இரண்டாமடி எதுகை நோக்கி "வைது" என்றிருக்க வேண்டுவது 'வய்து', என்றுள்ளது. நான்காமடி மூலத்தில் முழுவதுமே சிதைந்து காணப்படுகிறது. ஒருவாறு நிரப்பப்பெற்றுள்ளது.

32. வித்த கரத்த விடத்தே
வலம்புரி மேவுகின்ற
சுத்த கரத்த குடந்தையி
னுதை தொழாதவரூர்

புத்தி கரத்த லெனவொழி
யாய்கண் பொதிந்தவெற்றி
மத்த கரத்த வழல்போல்
மறலி வரும்பொழுதே !

(பொ-ரை) சமர்த்தர்களுக்கெல்லாந் தலைவனே ! வலம்புரிச் சங்கேந்திய, அழகிய இடது கரத்தை யுடையவனே ! குடந்தைக்கு நாயகனே ! உன் பகைவரதூர்களை விரைவில் தீ மறைப்பதுபோலே, மதத்தையும் ஆழ்ந்த கண்களையுமுடைய யானை வெருவி வருவது போன்று, இயமன் வரும்பொழுது என் புத்தியை மறைத்து விடாதே !

(கு-ரை) மரண காலத்தில் என் புத்தி தடுமாறும் நிலையை யடையாது உன்னை நினைக்குமாறு செய்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றார். மூலவேட்டில் இச்செய்யுளிரண்டாமடியிலும் மூன்றுமடியிலும் சில சீர்களேயிருக்கின்றன.

33\. வருந்தா ரணியந் திருத்தாய்
தரத்தம் மதிக்குடைக்கீழ்ப்
பெருந்தா ரணியன்று பெற்றதொப்
பார்பிரி யாவிதுரன்
விருந்தா ரணியர்பொன் மாடக்
குடந்தையின் மெய்யர்வையம்
பொருந்தா ரணியஞ்சப் பஞ்சவ
ராளப் புரப்பவரே !

(பொ-ரை) துன்பம் விளைக்கின்ற வனவாசத்தை அன்னை கைகேயி தர, அக்காட்டாட்சியையே தம் சந்திர வட்டக் குடைக்கீழ்ப் பெற்ற நாட்டாட்சியாகக் கருதின ஆராவமுதனே உள்ளத்திலிடங்கொண்ட விதுரனளித்த விருந்தினையுண்டவன் ; அழகிய மாளிகைகள் சூழ்ந்துள்ள குடந்தையி லெழுந்தருளியுள்ள மெய்ப்பொருள் ;

தேரேறிப் போர் செய்த நூற்றுவரஞ்சவும், பாண்டவர் நாட்டையாளவுங் காத்தவன்.

34. கருத்தின ஞரழல் காசினி
வாரிக் ககனந்திங்கள்
மருத்தின ஞகிய வெண்வகையான்
மங்கைக் காவலனைத்
திருத்தின ஞமங் குடந்தையி
லேயென் செவிக்கினிதா*
விருத்தின ஞதலின் வாரேன்
பிறக்க விறக்கவன்றே!

(பொ-ரை) திருக்குடந்தையில் ஆன்மா, சூரியன், தீ, மண், நீர், வெளி, சந்திரன், காற்று ஆகிய எட்டின் (அட்ட மூர்த்தியாக) வடிவமாக விருக்கின்றவனுடையதும், திருமங்கையாழ்வாரைத் திருத்திப் பணிகொண்டதுமான நாராயணு என்னும் திருநாமத்தை என் காதுகளுக்கு இனிதாக இருத்திக்கொண்டுவிட்டேன். ஆதலால் இனிப் பிறப்பதற்கு மிறப்பதற்கும் நான் ஆளாக மாட்டேன்.

35. * * * * *

36. துயில்வாய்த் தலையற்றுப் பாண்டவர்
பார்பெறச் சொன்னவன்றே
வெயில்வாய்த் தலைவ வாழிதொட்
டாய்வினை யேன்பிறவிப்
பயில்வாய்த் தலைப்பட வஞ்சுகின்றேன்
பள்ளி கொண்டவனே
செயில்வாய்த் தலையில்வெண் சங்கூர்
குடந்தைச் சிறந்தவனே!

---

* மூலத்தில் "செவிக்கருதா" என்றிருக்கிறது இது பொருந்தவில்லை.

(பொ-ரை) வயல்களில் வெண்ணிறச் சங்குகள் ஊர்ந்து செல்லுகின்ற குடந்தையில் சிறப்புறவிருப் பவனே ! பாம்பணையிற் பள்ளிகொண்டவனே ! பாண்ட வர்கள் நாடுபெற்றுத்தர வேண்டிக்கொண்டவப்பொ ழுதே துயிலுவதை விட்டுப் பகைவர்களின் அரணழியு மாறு சக்கரத்தையேவினாய். தீவினையேனாகிய நான், மேலும் பிறவியின் வாயிலகப்பட்டுக் கொண்டேயிருப் பதற்கு அஞ்சுகின்றேன்.

(கு-ரை) பாண்டவர்கள் வேண்ட பகைவரை அழித்தாய் நான் வேண்டுகிறேன், பிறவியாகிய பகையையொழிப்பாயாக என்பது ஓசை நயத்தால் கிடைக்கும் பொருள்.

37. சிறந்த வனைக்குந் திருவடி
சேவித்துத்* தெண்டிரைப்பார்
துறந்த வனைப்பதி னாலாண்
டளவுந் தொழாதவரூர்
மறந்த வனைக்கங் குடந்தைப்
பிரானை மலர்ந்தவுந்திப்
பிறந்த வனைத்தும் புரப்பானை
யேத்தும் பிறப்பறவே !

(பொ-ரை) தான் சிறப்புறுவதற்குக் காரணமாயி ருந்த கைகேயியாகிய அன்னையின் திருவடிகளை வணங்கி யரசாட்சியை, பதினான்காண்டுகள் துறந்தவனை, குடந் தையிலெழுந்தருளியிருப்பவனை, தன்னுந்திக்கமலத்தில் தோன்றியவெல்லாவுயிர்களையுங் காப்பவனை, நாட்டீரே ! உங்கள் பிறப்பொழியும் பொருட்டு ஏத்துங்கள்.

---

* மூலத்தில் " திருவிளஞ்சேவித்து " என்றிருப்பது பொருள் முடிவுக்கேற்றதாய் இல்லை.

38. பிறப்பற வைக்குங் குடந்தையி
ளுதனைப் பேதைநெஞ்ச
மறப்பற வைக்கக் கிடைக்குங்
கொல்லோ வாணனூ ரரிக்குஞ்
சிறப்பற வைக்குங் கொடுத்தவ
ளுயிரந் திண்புயமு
மறப்பற வைக்குமன் தொண்டுவந்
தாற்று மடித்தலமே !

(பொ-ரை) எனக்குப் பிறப்பேயில்லாமல் செய்து நித்திய சூரியாக்குங் குடந்தைத்தலைவனை, என் அறிவற்ற நெஞ்சத்தில் மறவாது வைத்துக்கொள்ளுகின்ற பேறு எனக்குக்கிடைக்குமோ (அறியேன்) நாட்டீரே ! வாணன் என்ற அசுரன் வாழ்ந்த நகரத்தைத் தீக்கிரையாக்கி அவனது ஆயிரங்கைகளையுங் கழுகுகளுக்குக் கொடுத்து அறவேயொழியுமாறு செய்தவனாகிய ஆராவமுதன் திருவடித்தலங்களுக்குத் தொண்டு செய்யுங்கள் !

39. * * * * *

40. இறைவரை யாலமு தண்டரெல்
லாமுண்ண வீசனச்சுக்
கறைவரை யாதுண்ண நீர்கடைந்
தோன்கம லாலயத்தோன்
மறைவரை யாயதற் கப்பாலு
மாகிய வார்கழற்கே
யுறைவரை யாள வுரியோன்
குடந்தை யுறக்கத்தனே !

(பொ-ரை) குடந்தையில் துயிலுகின்ற வாராவமுதன், தலைமை பெற்ற மந்தரம் என்ற பெயருடைய மலையைக் கொண்டு, தேவர்கள் அமுதுண்ணவும், சிவன்

வெறுக்காது நஞ்சையருந்தவும், பாற்கடலேக் கடைந்தவன், தாமரைப்பூவில் தங்கியிருக்கும் பிரமனுல் சொல்லப்பட்ட வேதங்களின் முடிவாகவும், அம்முடிபிற்கு அப்பாற்பட்டவனுகவுமிருந்து, தன்பாதங்களேயே பரவுகின்றவர்களேக் காக்குந் திருவுள்ளங் கொண்டவனுக இருக்கின்ருன்.

41. உறக்கந் தரத்தற் பணிப்பாயல்
மேல ருவணச்செம்மல்
நிறக்கந்த ரத்தர் குடந்தையின்
ஞதர்நன் னீணிலேவேல்
மறக்கந்த ரத்தர் வலத்தரென்
றேத்தி வணங்கினர்க்கு
துறக்கந்த ரத்தவி ராரென்று
வேதங்கள் சொல்வனவே !

(பொ-ரை) உறக்கங் கொள்ளும் பொழுதெல்லாம் தமக்கேயுரிய பாம்பணேயிலே காணப் பெறுபவர், கருடாழ்வாரது பொன்னிறம் பொருந்திய கழுத்திலே எழுந்தருளுபவர், குடந்தையின் தலேவர், இலே போன்ற வடிவுள்ள வேலாயுதத்தைக் கொண்டுள்ள கந்தனுக்குத் தந்தையாகிய சிவனே வலது பக்கத்திலுடையவர் என்றெல்லாம் சொல்லி வணங்குகின்றவர்களுக்குச் சுவர்க்கலோகத்தை யளிப்பதற்குச் சிறிதும் தயங்கமாட்டார் என்று வேதங்கள் சொல்லுகின்றன.

42. சொல்வலி யாலந் துந்துடைப்பாவசம்
மெற்றன தோற்றிவித்தோன்
புல்வலி யானே மருதஞ்
சகடம் புனற்குருந்த

மல்வலி யாவிடைச் செற்றேன்
குடந்தையில் வாழ்த்துநெஞ்சே
கல்வலி யாகநின் றெற்றிய
பாத கமலங்களே !

(பொ-ரை) மனமே கஞ்சனாலேவப்பட்ட மிகுந்த வலிமையுள்ள யானை, மருதமரம், வண்டி, காளிங்கமடு, குருந்தமரம், ஆன்கன்று இவைகளை யழித்தவனது குடந்தைக்குச் சென்று, அன்று ஒரு காலத்து ஒருகல் அகலிகையாமாறு இடறிய பாத தாமரைகளை வாழ்த்துவாயாக !

(கு-ரை) முதலடி, பொருள் விளங்குமாறில்லை.

43. * * * *

44. என்று மதிக்கு மிரவிக்கு
மானு மிருபடையாய்
என்று மதிக்கு மிமையோர்
பரவ யிமையச்செம்பொன்
குன்று மதிக்குங் கடல்போ
லதிர்ந்தெழு கூற்றினுயிர்
குன்று மதிக்கும்ப கோணத்தி
னார்க்கில்லை கூறினமே !

(பொ-ரை) சந்திரனையும் சூரியனையுமொத்த சங்கு சக்கரப் படைகளை யுடையவனே ! எக்காலத்தும் போற்றுகின்ற தேவர்கள் துதிக்கும் வண்ணம், நீ யன்று பொன் மயமான இமயம் போன்ற மந்தரமலையால் கடைய, அதிர்ந்தெழுந்து வந்த கடல்போலே வருகின்ற இயமனது, உயிர்களை வாதனை செய்யும் அவ்வற்பமதி, குடந்தையில் வாழ்கின்ற மக்களிடத்திற் செல்லாது. இதனை நாம் உறுதியாகச் சொல்லுகிறோம்.

45. கூறின மாய திருவெட்
டெழுத்துங் குடந்தையிற்போ
யாறின மாயனை யாரா
வமுதை யறவயர்த்த
சீறின மாய விடுத்தவர்
வல்வினைச் சிந்தைசெய்தேம்
பாறின மாய வினையினிப்
போனது பாருறவே !

(பொ-ரை) குடந்தையிலே சென்றிளைப்பாறிய (பள்ளிகொண்ட) மாயனை, ஆராவமுதை, அறவே மறந்தவர்களை, மிகத்தாழ்ந்த வற்பர்களாக்கிவிட்ட அவனது 'நாராயணாய நம:' என்ற எட்டெழுத்தைக் கூறினேம். ஆதலால் என் வினைகளெல்லாந் தூளாகிவிட்டன. இனி உலகத்தோடுள்ள உறவும் போயிற்று !

(கு-ரை) மூலத்திலிப் பாடலடிகளுஞ் சொற்களும் பலவாறு சிதைந்தும் பொருட் பொருத்தமற்றுமுள்ளன.

46. பாராளனையவர் பைவளை
வன்படைப் பங்கயக்கைக்
காராளனவருந் தெவ்வரு
மானவன் கார்க்கமலப்
பேராளனைத்தரும் பெம்மான்
குடந்தையைப் பேசவிடந்
தாராளனவயிற் றிற்றதன்
றேபவ சாபங்களே !

(பொ-ரை) பூமகளுக்குரியவன், சக்கரத்தையேந்தியுள்ளதும் தாமரைப்பூக்கள் பூத்திருக்கின்றதுமாகிய மேகத்தையொப்பவன், பாண்டவர்களாகவும் அவர்களது பகைவர்களாகவும் இருப்பவன், கமலத்தவன் என்றபெயரினனாகிய பிரமனைப் பெற்றவன், வாழ்கின்ற

குடந்தையைப் போற்றினல், எந்த ஒரு அன்னையும் தன் வயிற்றை நமக்கு இடமாகத் தரமாட்டாள். பிறப்புக் குரிய சாபங்களெல்லாம் அன்ருேடு தொலைந்து போகும்!

(கு-ரை) "ஐவருந்தெய்வருமானவன்" என்பது எல்லாம் திருமாலே என்ற மரபைக் குறிப்பதாகும். குடந்தையைப் போற்றின் பிறப்பற்றுவிடும் என்பது கருத்து.

47. சாபத் தனத்தை மிதிலையிற்
காட்டித் தனக்கமுதாக்
கோபத் தனத்தைத் தழுவும்
பிரானைக் குடந்தையிலே
யாவத் தனத்தை யவ்வாரா
வமுதை யயர்த்துஞ்சொல்லார்
பாவத் தனத்தை யமுதென்று
வீழ்சில பாதகரே !

(பொ-ரை) பாவ காரியங்களைச் செய்து அதனுல் வருகின்ற அன்னத்தை அமுதமென்று விரும்பியுண்ணுகின்ற சில பாதகர்கள், தம்முடைய வில்வித்தையின் திறத்தை மிதிலையிலே காட்டி, பட்டுப்பூச்சி போன்ற உதடுகளையுடைய அன்னம் போல்பவளாகிய சீதாப் பிராட்டியைத் தனக்கமுதாகத் தழுவிக் கொண்டவனை, குடந்தையில் எழுந்தருளியிருக்கின்ற எய்ப்பினில் வைப்பை, ஆராவமுதனை மறந்துஞ் சொல்லாதவர்களாயுள்ளார்கள்.

48. பாதக ரானதொண் ணூற்ருென்
பதின்மர்முன் பண்டுவந்த
மாதக ரான மதியிலி
பால்மன்ன ரைவர்விட்ட

தூதக ராவொடு செல்வினை
யாடு துறைக்குடந்தை
நாதக ராசலம் போலென்று
மாதவம் நான்செய்வதே !

(பொ-ரை) அநியாயக்காரர்களாகிய தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு முதலிலே பிறந்தவனும், மமதை கொண்டவனுமாகிய துரியோதனனிடம், ஐவர்களால் விடப்பெற்ற தூதுவனே ! குடந்தையின் தலைவனே ! நீர்த்துறையில் முதலையுடன் போராடிய அந்த யானை, தவஞ் செய்திருந்தாற்போல் நான் என்று தவஞ்செய்யப் போகின்றேன் ?

49. செய்வன வாவித் திருத்தொண்டு
நாடொறுந் தீவினைகாத்
துய்வன வாவி நிரைப்பினின்
றேனுரவோனை மாரன்
எய்வன வாவிக் கினஞ்சேர்
குடந்தையின் என்றனற்குத்
தைவன வாவிகண் டானதன
தானென் தலைத்தாமே !

(கு-ரை) மூலம் தெளிவாக இல்லை.

50. கரவல வன்பல மாரியில்
காரியில் சங்கினென்றே
யிரவல வன்பலர் பாலமன்
னேயிருக் காலொருக்கால்
பரவல வன்படைச் சால்வழி
யேமலர்ப் பாயலிற்போய்
கரவல வன்பெடைக் கஞ்சுங்
குடந்தையில் கார்வண்ணனே !

(கு-ரை) பொருள் விளங்குமாறில்லை.

51. கண்ணனை யத்தனை யன்பா
லுருகிக் கருதவல்லார்க்
கெண்ணனை யத்தனை யாக்கவல்
லானெழு காளமுகில்
வண்ணனை யத்தனைப் பாகத்துள்
ளானை வனசப்பூவின்
தண்ணனை யத்தனைத் தந்தான்
குடந்தைச் சயனத்தனே !

(பொ-ரை) கண்ணபிரானை, தலைவனை, நீருண்ட மேகம்போல் நிறமுடையவனை, சிவனையொரு பாகத்தி லுள்ளவனை, உந்தித் தாமரையின் வழியே பிரமனைத் தந்தவனை, அன்புகொண்டு மனமுருகி நினைக்க வல்ல வர்களைக் குடந்தையில் சயனித்திருப்பவன், திருமகளின் அருளுக்குப் பாத்திரமாக்குவன்.

(கு-ரை) "திருமாலை மனமுருகி வாழ்த்துகின்றவர்களைச் செல்வஞ் சிறக்க வாழச் செய்வான்", என்பது கருத்து !

52. சயனத் தனைத்தென் குடந்தையி
லாதியைத் தாமரைமே
லயனத் தனையெனக் காரா
வமுதை யருளிருக்கும்
நயனத் தனையின்னு நல்ல
பிரானை யென்றுவுரைக்கும்
பயனத் தனையுமன் றேபிற
வாத பதந்தந்ததே !

(பொ-ரை) பள்ளி கொண்டிருப்பவனை, குடந் தையில் உள்ள ஆதிப்பிரானை, தாமரைப் பூவிலுள்ள பிர மனுக்குத் தந்தையை, எனக்கு ஆராவமுதை, அரு ளொழுகுங் கண்களையுடையவனை, மேலும் நல்ல பெரு

மானை என் நாவினாலே பலமுறை சொல்லிய பயனெல்லாந் திரண்டதல்லவோ எனக்குப் பிறவாப் பதத்தைத் தந்தன !

53. பதந்தந்த வாவறுத் தென்னையு
மாளுங்கொல் பாசடைக்கே
மிதந்தந்த வாரிதிக் கண்வளர்ந்
தோன்விதி யார்மறையின்
மதந்தந்த வாவிக் குருகூ
ரரசு மகிழ்குடந்தை
யிதந்தந்த வராண முய்யவப்
போதஞ்ச லென்றவனே !

(பொ-ரை) விதிக்கப்பெற்ற ஞாயங்களையுடைய வேதங்களின் சாரமாகப் பாசுரங்களையருளிய நம்மாழ்வார், பெரிதும் விரும்புகின்ற குடந்தையாகிய திவ்ய தேசத்திலே தாமரையிலையில் திருவவதாரஞ் செய்து பாற்கடற்கண்ணே கண் வளர்ந்தவன், அன்பு காட்டிய யானை கடைத்தேறும் வண்ணம் அஞ்சலென்று சொல்லி யாதரித்தவன், என்னையும் பாசங்களினின்று விடுவித்து பரம பதந்தந்து ஆண்டுகொள்வானே !

54. என்றவ ரைப்புறம் போகாமுன்
கங்குலிழைத் ததிராய்
நின்றவ ரைச்செற்ற நேமிப்
பிரானை நெடுநீர்க்குடந்தை
மன்றவ ரைப்பொன் வரைத்தவ
ரான்மதிள் மூன்றெரித்துப்
பொன்றவ ரைக்கணத் தெய்வித்த
வாழிப் புராதனனே !

(பொ-ரை) சூரியன் அந்த உதயகிரியின் புறத்தே போவதற்கு முன்னே யிரவையுண்டாக்கிப்

பகைவர்களாய் நின்றவர்களையழித்த சக்கரப் படையை யுடையோன் யாரெனின், பல தீர்த்தங்கள் உள்ள குடந்தையிலே பொன்மலையாகிய வில்லினாலே திரிபுரத்தை யெரித்து அழித்தவரையொருகணப் பொழுதிலேயழித்து விட்ட மிகமிகப் பழையவனேயாவான் !

(கு-ரை) "எதிராய் நின்றவர்" நூற்றுவர். பாரதப் போரில் சயத்திரதனையழிக்கப் பகலையிரவாக்கினார் என்பது வரலாறு.

55. பூராந்த காரணர் போற்றுங்
குடந்தைப் புனிதர்பொய்கை
காராந்த காழியர் கால்பணிந்
துய்கிலர் காமுகராய்
பீராந்த கராக மடவார்
கலவியைப் பெற்றவர்பால்
சீராந்த காராம் புயராய
வர்க்கென்கொல் செப்புவதே !

(பொ-ரை) திரிபுரத்தையெரித்த சிவனால் போற்றப்பெறுகின்ற பரிசுத்தரும், அன்று குளத்தில் காணப்பட்ட முதலையையொழித்தழித்த சக்கரப்படையை யுடையவருமாகிய ஆராவமுதனின் பாதங்களைப் பணிந்து கடைத்தேற மாட்டாதவர்கள், பெண்பித்துக் கொண்டவர்களாக மயக்கவிருளிலகப்பட்டு, அப்பெண்களின்பத்தைப் பெற்று தலைமீது குவித்த கரங்களையுடையவர்களாய்த் திரிகின்றவர்களுக்குச் சொல்வதற்கென்ன இருக்கிறது ?

56. செப்புவ னத்துறை கைப்போ
தனைத்திரு தாயுரைத்த
வெப்புவ னத்துறை மேகமன்
ஞானயம் மேகந்தந்த

வப்புவ னத்துறை சூழுங்
குடந்தையி லாரமுதை
யிப்புவ னத்துறை தோலாய
கூட்டி லிருப்பறவே !

(பொ-ரை) தாமரைப் பூவாகிய கைகளைக் கொண்டவனை, அன்பு கொண்ட கைகேயி கொடுத்த காடுகளில் தங்கிய மேகம் போன்றவனை, அம்மேகங்கள் தந்த நீர் நிரம்பிய புண்ணியத்துறைகள் சூழ்ந்துள்ள குடந்தையில் எழுந்தருளும் ஆராவமுதனை, நான் தோலாகிய கூட்டிலிருந்து வெளிப்பட்டோடும் பொருட்டு முறைப்படி சொல்லிக் கொண்டேயிருப்பேன்!

(கு-ரை) "இருப்பறச் செப்புவன்" என முடிக்க. இச்செய்யுள் நான்காமடியினிறுதிச் சொல்லும் முதலடியின் முதற்சொல்லும் இணைந்து பொருள் தருவதால் இது விற்பூட்டணி !

57. அறவே தனைமிகுத் தைவரும்
போதைவர் போமளவில்
உறவே தனையுமுற் றருமன்
றேவுயிர் போயொடுங்கு
திறவே தனைதனக் கொப்பாங்
குடந்தையில் செங்கனக
நிறவே தனைத்தந்த நின்னடிப்
போதி னிழலலதே !

(பொ-ரை) மிகுந்த மரண வேதனையுண்டாகிக் கபம் வரவும் ஐம்பொறிகளும் தஞ்செயலற்றுப் போகவுமான நிலையில் அன்னையுமுற்றரும் உறவில்லை. பொன்னிறம் பொருந்திய பிரமனைப் பெற்ற அன்னைக்கொப்பாகக்

குடந்தையி லெழுந்தருளி யிருக்கின்ற நின் பாத தாமரையின் நிழலல்லாது வேறு உறவேது !

(கு–ரை) ஒரு ஐவர் வருகிறார்கள், மற்றொரு ஐவர் போகிறார்கள் என்றாலும் நின்னடிக்கஞ்சமே தஞ்சம் என்பது நயம் !

58. நிழற்கோ வலமரு நெஞ்சுடை
யேனந்த நெஞ்சினன்பால்
விழற்கோ வலத்தல்ல வீடுமப்
பேறு செம்பொற்
கழற்கோவல னுரைக் கார்வண்ண
னேகண்ண னேகுடந்தைக்
குழற்கோவல வெம்மைக் கொன்றுக்
கொன்றேமறக் கூற்றெய்த்ததே !

(கு–ரை) பொருள் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

59. எய்க்கு மிடைக்கு முலைக்கு
நலங்கிடை யாயவைத்துப்
பைக்கு மிடைக்கு மலந்தேன்
அருள்பகைத் தாரணிதான்
கைக்கு மிடைக்குஞ் சரமே
குடந்தைக் கருமுகிலே
மைக்கு மிடைக்குந் துலைபுகு
தாத மரகதமே !

(பொ–ரை) பகைவர்களின் சேனையை வெகுண்டு அழித்த மதயானையே குடந்தையில் தங்கியிருக்குங் கரிய மேகமே அரக்கிற்குந் தராசுக்குஞ் செல்லாத மரகதமே, பெண்களின் மெல்லிய இடைக்கும் முலைக்கும், அல்குலுக்கும், கூந்தலுக்கும், ஏங்கியலைந்தேன். இனியிந் நிலைநீக்கி யருள்வாயாக !

60. மரகதத் துக்கும் மழைக்குமெய்
யாகிய வண்ணனுக்குக்
கரகதத் துக்குன் றழைத்த
வவனுக்குக் கால்மலிந்த
குரகதத் துக்குங் குடந்தைப்
பிராற்கென் குறையுரைத்தே
னரகதத் துக்குப் பிறப்பென்று
கூட்டின னன்னெறிக்கே !

(பொ-ரை) மரகதத்தையும், மேகத்தையுமொத்த திருமேனியை யுடையவனுக்கு, முதலையை யழிப்பதற் கென்று குன்று போன்ற யானையா லழைக்கப் பெற்ற வனுக்கு, கால்கள் நிரம்பியுள்ள பாம்பாகிய ஆதிசேடன் மீது பள்ளி கொண்டவனுக்கு, என் குறையைச் சொன் னேன். அதற்கு நான் நரகத்தை யழிப்பதற்கும் நன் னெறி பெறுவதற்குமாக இப்பிறப்பை யெனக்குத் தந்துள் ளான் !

61. நெறிக்கப் படாவஞ்ச ஞவியுங்
காய நிலைகுலையப்
பிறிக்கப்பட் டால்முலை மாதொடு
போம்பெரு மாள்குடந்தை
குறிக்கப்பட் டாதலால் நெஞ்சே
குறிக்கொடுங் கூற்றினைவேல்
வெறிக்கப் படாதினி மேனன்று
வீடு வெளிப்படுமே !

(பொ-ரை) அழிக்கமுடியாத வஞ்சனுகிய கஞ்சனு டைய உயிருமுடம்பும் அழியவும், பாலூட்ட வந்த பூதனை தொலையவும், அவர்கள்மீது போகிய பெருமான் எழுந் தருளியுள்ள குடந்தை என்றல் நினைக்கப்பட்டு விட்டது. ஆதலால் இயமனது கூரியவேல் என்மீது வெற்றி

கொள்ளாது. உறுதியாக எனக்கு வீட்டுலகம் கிடைத்து விடும்!

62. வெளிப்பட்ட வாடகத் தூசுடைச்
சூலம்வெண் சங்குபடை
நெளிப்பட்ட நாக மணியணி
தீமை நிறஞ்சிலம்பா
களிப்பட்ட சிந்தையில் கண்பட்டு
வேறு கவலையற்றார்க்
கொளிப்பட்ட மாயன் குடந்தையி
லாதி யுறைவிடமே!

(பொ-ரை) கடவுட் காட்சியிலே கண்ணுங்கருத்துங் கொடுத்து, வேறு கவலையின்றி வாழ்கின்றவர்களுக்கு ஒளி பொருந்திய ஆராவமுதன் எழுந்தருளியுள்ள குடந்தையிலே, தோலாடையும், பீதாம்பரமும், சூலப்படையும், வெண்சங்கும், பாம்பணியும், கவுத்துவமணியும், நெருப்பு நிறமும், மேகநிறமும், வெளிப்பட்டுக் காட்சிதரும்!

(கு-ரை) இச்செய்யுள் சங்கர நாராயணத் திருவுருவைக் குறிப்பதாகும். இதில் சங்கரனுக்குரியவையும் நாராயணனுக்குரியவையும் கூறப் பெற்றுள்ளன.

பொய்கை ஆழ்வார் தம் பாசுரத்தில் சங்கர நாராயண தத்துவம்பற்றிப் பேசுகிறார்.

"ஏற்றான் புள்ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு"!

என்பது பாசுரம். மேலும்;

" தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னுணுந் தோன்றுமால் — சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து "

என்பார் ஆழ்வார்.

அரியும், சிவனும் ஒன்றென்பது உலகவழக்கு.

" வேறு கவலையற்றார்க்கு " என்ற பகுதி வேறு பாட்டுணர்ச்சி யில்லாதவர்களுக்கு, இருவரு மொருவராகத் தோன்றுவர் என்ற தொனிப்பொருளைத் தருகிறது.

63. உறைவிட மோதனித் தாமரைப்
போதைய ருண்டுமிகக்
குறைவிட மோதடங் கண்களென்
பார்குடந் தைப்பழநூல்
நிறைவிட மோதமில் மாதவன்
கால்கொல் நீள்பிறவிச்
சிறைவிட மோதவென் றேவஞ்ச
மாதர் திறம்படர்ந்தே !

(கு-ரை) பொருள் விளங்குமாறில்லை.

64. படரா குவிக்கும் கழையும்
பவளமும் பாவையர்க்கே
இடரா குவிக்குநின் கோலமுங்
காட்டி லெமதுயிர்மே
லடரா குவிக்கடுங் கூற்றுவன்
பாச மறுமறைநூல்
தொடரா குவிக்கயஞ் சூழுங்
குடந்தைத் துழாயண்ணலே !

(பொ-ரை) புராணங்களால் போற்றப்படு கின்ற புண்ணியத்துறைகள் சூழவுள்ள குடந்தையிலே வாழ்கின்ற துளவமாலையை யணிந்த பெருமை தங்கிய வனே ! ஆங்காங்கு சென்று மேய்கின்ற பசுக்களையொரு சேர அழைக்கின்ற குழலும், அக்குழல்வைத்தூதுகின்ற பவளவாயும், நின்திருக்கோலமும் நின்னைக் காதலித் தார்க்குத் துன்பமே விளைவிக்கும். ஆனல் அக்கோலத் தையெனக்குக் காட்டுவாயாயின் அக்காட்சியினுல் என் மேல் அடர்த்து வருகின்ற இயமனது பாசக்கயிறு அறுந்துவிடும் !

(கு-ரை) "ஆக்குவித்தார் குழலாலரங்கேசர்" என்பர் பிள்ளைப்பெருமாளையங்கார்.

65. அண்ண லனந்த சயனன்
புராதனன் ஆரணவிற்
பெண்ண லனந்த வளத்த
காத்தனென் போர்களெல்லா
மெண்ண லனந்த குமரனென்
பாற்குளிரின் செறிவின்
கண்ண லனந்தனத் தோர்
குடந்தையில் கார்வண்ணனே !

(கு-ரை) பொருள் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

66. காரனை யானைக் குடந்தையி
லாதியைக் கண்ணனைத்தா
ஞேரனை யானையெம் முள்ளூற்
றுறையு முறியில்வெண்ணெய்ச்
சோரனை யானையும் பாஞ்சா
லியுமுன் றுயர்க்கழைத்த
போரனை யானை வினைகெடுத்
தானென்கை பொல்லாததே !

(பொ—ரை) மேகத்தையொத்தவனை, குடந்தையில் உள்ள பழையவனை, கருநிறத்தனை, தன்னைப் பாரில்லாதானை, யென்னுள்ளத்தினுள்ளே யுறைபவனை, வெண்ணெயைத்திருடினவனை, யானையாலும் திரௌபதியாலும் அழைக்கப்பெற்ற போர்வீரனை (இப்பேறு பெற்ற செயல்களைச் செய்தவனை) வினை கெடுத்தான் என்று சொல்லுகிறார்களே ; இது அநியாயம் !

(கு-ரை) "வினைகெடுத்தான்" என்பதற்கு அன்பர்களின் தீவினையைப் போக்குபவன் என்பது பொருள். இதனை ஆசிரியர் சிலேடையாக்கிக் காரியத்தைக் கெடுத்தவன் என்று பொருள் கொண்டு நயங்காட்டி மகிழ்கின்றார் !

67. அல்லு முருக்குங் குழலு
மிதழுமென் றுதரவால்
புல்லு முருக்கும்பி யென்போடு
தோலென்று போதகமும்
மல்லு முருக்கும் பெருமான்
குடந்தையை வாழ்த்துநெஞ்சே
கல்லு முருக்குங் கழலல்ல
தேதொன்றுங் காண்பரிதே !

(பொ-ரை) இருளை ஏங்கவைக்கின்ற கூந்தல் என்றும் உதடுகள் என்றும் பேசி யணைத்துக் கொள்ளப் படுமுருவம் (பெண்) கும்பி, எலும்பு, தோல்களாலானது என்று வெறுத்து, மனமே ! குடந்தையை யெண்ணி வாழ்த்துவாயாக. கல்லையும் உருகவைக்கின்ற அவனது பாதங்களையல்லாமல் இந்த இழிந்த நிலைமையைப் போக்குவதற்கு வேறு ஒன்றையுங் காணமுடியாது !

68. அரிநம நாரண வென்னவொட்
டாதர சாண்டவெற்றி
யரிநம நாரண நன்னீர்க்
குடந்தையி லஞ்சலியா

வரிநம நாரண வென்றுநின்
　　　　ேறற்றிய வச்சுதரா
யரிநம நாரண ரயயரு
　　　　மாகுவரா வங்கவற்கே !

(கு-ரை) மூலம் தெளிவாக இல்லை.

69. ஆங்கமு கிற்றலை மீதோடு
　　　　காவிரி யாழியிற்போ
யாங்கமு கிற்கமு தாகுங்
　　　　குடந்தையி லண்டருய்யச்
சாங்கமு கிற்கம லத்தே
　　　　தரித்தவர் தாம்நமக்கோர்
சாங்கமு கிற்பிற வோமன
　　　　னேயவர் தாளுரையே !

(பொ-ரை) உயர்ந்து வளர்ந்திருக்கின்ற பாக்கு மரங்களின் தலைகளிலே தோய்ந்து ஓடுகின்ற காவிரி நீர், கடலுக்குச் சென்று பின் மேகக் கூட்டங்களுக்கு அமுதமாக ஆகின்ற குடந்தையில் தேவர்கள் துன்ப நீக்கம் பெறும் பொருட்டுத் தாமரைப்பூப்போன்ற திருக்கரத்திலே வில்லையேந்திய ஆராவமுதப் பெருமானே நம் மரண காலத்திற்குப் பெருந் துணையாவான். ஆதலால் மனமே அவனது திருப்பாதங்களையே பேசுவாயாக !

(கு-ரை) இச்செய்யுளின் முதலடியை "பைங்கமுகின் கூந்தல் மேற்கங்கைக் கொழுந்தோடும் நன்னுடன்" என்ற நளவெண்பா அடிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க. (பின் 89 - ஆம் செய்யுளிலும் இக்கருத்து வருதல் காண்க.)

70. உரைத்தவ ருக்குஞ் செழுநீர்க்
　　　　குடந்தைக்கு மும்பருக்கும்
வரைத்தவ ருக்கு மயக்குநல்
　　　　லார்மட வார்பிரியார்

நரைத்தவ ருக்கும் வெயிலோ
நிலவென்று நெஞ்சையங்கே
கரைத்தவ ருக்கக மாகவைத்
தார்புறங் காட்டகமே !

(பொ-ரை) தீர்த்தங்கள் சூழ்ந்துள்ள குடந்தையாகிய திவ்யதேசத்தைச் சொன்னவர்களுக்கும் தேவர்களுக்கும் நல்லவனாக இருப்பவன், நரைத்து வயது முதிர்ந்த பெண்களாயினும் அவர்களையுந் தொடர்ந்து இக்கூந்தல் வெய்யிலோ அல்லது நிலவோ என்று கூறிப் புகழ்ந்து அவர்களிடத்தே நெஞ்சத்தைப் பறிகொடுத்து அலைகின்றவர்களுக்குச் சுடுகாட்டையே இடமாக ஒதுக்கி வைத்துவிடுவான் !

71. காட்ட மரங்களை யங்கினங்
காயங் கவரநெஞ்சே
கேட்ட மரங்களை யோடயர்ந்
தோய்வறிற் கேடினிப்போம்
தேட்ட மரங்களை யாகநின்
காதலித் தென்குடந்தை
நாட்ட மரங்களை யின்னம்
பெருத நலம்பெறவே !

(கு-ரை) *பொருள் வல்லார்வாய்க் கேட்டுணர்க.*

72. நலம்பெற்ற வாவிக் குடந்தையி
ஞதனை ஞரணனை
வலம்பெற்ற வாகன னென்னவைத்
தாயரு ளாளவென்றே
புலம்பெற்ற வரடிப் போதில்
பணிசெய்யப் போதுநெஞ்சே
கலம்பெற்ற வாருக்கு நம்பவ
வெல்லை கடப்பதற்கே !

(பொ-ரை) மனமே! தங்கண் ஆடுவார்க்குத் தரத் தக்க புண்ணியத்தைப் பெற்றுள்ள தீர்த்தங்கள் சூழ விருக்குங் குடந்தையின் தலைவனை, நாராயணனை நோக்கி இடப வாகனத்தையுடைய சிவனை வலது பாதத்தில் வைத்திருப்பவனே, அருள் நிரம்பியவனே, என்றெல்லாம் சொல்லி, அதனால் ஞானம் கைவரப்பெற்று அவனடித் தாமரைகளுக்குத் தொண்டு செய்யச் செல்வா யாக. அத்தொண்டு நம் பிறவிக்கடலைக் கடப்பதற்கு மரக்கலம் பெற்றவாறாக அமையும்!

73. கடப்பாடு பூணவன் கைப்பொருள்
போலென் கருத்தில்வரும்
மடப்பாடு போகவந் தாண்டுகொண்
டான்மத மாவழைக்கத்
தடப்பாடு சென்றவன் சாவும்
பிறப்பு மெனைத்தவிர்த்து
விடப்பாடு வித்த பெருமான்
குடந்தையின் மெய்ப்பொருளே!

(பொ-ரை) நான் கடமையுணர்ச்சி பெறும் வண்ணம் அவன் கையிலகப்பட்ட பொருளாக விருக்கின்ற என் மனத்தில் நிகழும் அஞ்ஞானந் தொலையுமாறு வந்து ஆண்டுகொண்டான். அன்று ஒரு யானையழைக்க அவ்விடத்தையடைந்தவனும், நான் பிறப்புமிறப்பு மற்ற பேரின்ப நிலையையடையும் பொருட்டு அவனைப்பாடு மாறு செய்தவனும் யாவன் எனின், குடந்தையில் வாழ் கின்ற அழியாதவனேயாவான்!

74. மெய்ய னனந்த மறைநூலி
லன்னைதன் வெண்ணெயிலோர்
பொய்ய னனந்த குமார
னென்போன் குணர்ந்தாடிமலர்

செய்ய னனந்தனத் தோடுற
வாடு திருக்குடந்தை
அய்ய னனந்த சயனப்
பிரானென்னை யாண்டவனே !

(பொ-ரை) நந்தகுமாரனாகிய ஆராவமுதன் அளவற்றவேதங்களிலே என்றும் அழியாத மெய்யனாக உள்ளான். ஆனால் வெண்ணெய் தின்ற செய்தியறிந்த அன்னையின் விசாரணையில் பொய்யனாக உள்ளான். பொற்றாமரையின் அவதரித்த அன்னம் போன்ற திருமகளின் தனத்துடன் உறவாடுகின்றவன், திருக்குடந்தையில் பள்ளிகொண்டிருப்பவன், அவனே என்னை ஆட்கொண்டவன் ஆவான் !

75. ஆண்டவனைத் தொண்ட னுமா
றெனத்தனை யாதரித்தோர்
வேண்ட வனைத்துந் தருந்திரு
மாலை விசும்புமுட்ட
நீண்ட வனைச்சென்று நெஞ்சே
குடந்தையில் நீபணிகைக்
காண்ட வனைத்துந் தரும்பவ
மேழையுங் கண்டுகொள்ளே !

(பொ-ரை) என்னையாண்டுகொண்டவனை அவனுக்கடிமையாக விரும்பி அவனைச் சேர்ந்தவர்கள் விரும்பிக் கேட்டன. கேட்டனவற்றைத் தருகின்ற திருமாலை, விண்ணளவும் உயர்ந்து நின்றவனை, மனமே! குடந்தையில் சென்று வணங்கு நீ வணங்குவதைக் கண்டு அதற்கேற்றாற்போல் உனக்கு எல்லாவற்றையுந் தருவான். மேலும் எழுபிறப்பின் பயனையும் அடைவாய் !

76. கண்டுக ளாவின் கனியன்ன
மேனியன் கையினெய்யை
பெண்டுக ளாவென்னப் பாடியில்
வந்தவன் பாடியெங்கும்
வண்டுக ளாருங் குடந்தையி
லேகண் வளர்ந்துநல்ல
தொண்டுக ளால்வழி பாடுசெய்
வார்க்கருள் சோதியனே !

(பொ-ரை) களாம்பழத்தையொத்த கருநிறமுடைய வனுங் கைநிறைய வெண்ணெய் வைத்திருப்பதைப் பார்த்து ஆயர்பாடிப் பெண்கள் ஆ! ஈதென்னவென்று வியப்பும் அச்சமுங்கொள்ளுமாறு ஆயர்பாடிக்கு வந்து ஆடல்புரிந்தவனும் யாவன்எனின், வண்டுகள் இசை பாடிக்கொண்டு எங்குந் திரிகின்ற குடந்தையிலே அறி துயில் கொண்டிருந்து தனக்குத் தொண்டு செய்து வழி பாடு புரிகின்றவர்களுக்கு அருள் செய்கின்ற சோதிமய மானவனே !

77. சோதித் தனையென துள்ளத்
திருத்திநின் தொல்கழலோர்
போதித் தனையும் நினைக்கவொட்
டாய்பொன்னி சூழ்குடந்தை
யாதித் தனையும் மதியையும்
போலிரண் டாயிரத்தால்
வாதித் தனைவரை ஐவரை
வாழ்விக்க வல்லவனே !

(பொ-ரை) காவிரி சூழ்ந்துள்ள குடந்தையிலே ஆயிரம் சூரியர்களைப் போலவும், ஆயிரம் சந்திரர்களைப் போலவும், ஒளியுடன் எழுந்தருளியிருந்து மக்களாவார் அனைவரையும் ஐவரையும் வாழவைக்க வல்லவனே !

உன்னுடைய பழம் பெருமை பெற்ற திருவடிகளை என் உள்ளத்தில் இருத்தி ஒரு சிறு பொழுதேனும் நினைக்க வொட்டாமல் என்னை சோதிக்கின்றாய். இது தகுமோ!

78. வல்லையி லாமையை கொங்கைக்
கிடைக்கென்று வாய்த்ததொப்பார்க்
கெல்லையி லாமயல் கொண்டுழல்
வீரிற வானெறிக்குப்
புல்லையி லாமை நறுநீல
மேயும் புனற்குடந்தை
தொல்லையி லாமயன் என்னீ
ரினியத் துறைமறந்தே!

(பொ-ரை) பெண்களின் தனம் சூதாடு கருவியையும், அவர்களின் இடை இல்லாமையையும் ஒப்பதாகும் என்றெல்லாம் சொல்லி அளவில்லா மயக்கங் கொண்டு, அவர்களோடே திரிகின்ற மக்களே! இனியேனும் அந்த இழிவான வழியைமறந்து வீட்டுலகத்தை யடையும் பொருட்டு, புல்லை மேய்கின்ற ஆமை நீலோற்பலப் பூவை மேய்கின்ற குடந்தையில் எழுந்தருளியிருக்கின்ற அழியாப் பெரும்பதத்தானேயென்று சொல்லுங்கள்!

(கு-ரை) இல்லாமை — வறுமை. அதாவது இடை மிகச் சிறியது என்பது. புல்லை மேய்கின்ற ஆமை பூவை மேய்கின்றதே. அதுபோல மக்கள் கீழ்நிலை நீக்கி மேனிலை அடையவேண்டும் என்பது ஓசைநயத்தால் கிடைக்கும் பொருள். இது கருத்துடை அடைகொளி அணி.

79. மறக்கவல் லாயென்னை யானடைந்
தேனுன்னை வண்டினங்கள்
சிறக்கவல் லார்பொழில் சூழுங்
குடந்தையில் தெள்ளமுதே

பிறக்கவல் லாயுன் பிறவாத
சோதிக்கென் பேதைநெஞ்ச
முறக்கவல் லாநிற்கு மாமலைத்
தேன்முட முண்பதொத்தே !

(பொ-ரை) வண்டினங்கள் சிறந்து பாட மேகங்கள் தங்கும் பொழில்களால் சூழப்பெற்றுள்ள குடந்தையில் வாழுந் தெள்ளத்தெளிந்த அமுதே என்னை உன்னால் மறக்கமுடியாது. ஏனெனின் நான் உன்னையடைந்து விட்டேன். நீ பலவாறு பிறக்கவல்லாயென்றாலும் உனது பிறவாத சோதித் தன்மையையடைய என்பேதை மனம் உயர்ந்த மலையின் கண்ணேயுள்ள தேனை, முடவன் உண்பதற்கு விரும்பினாற் போல விரும்புகிறது !

80. உண்பது மத்தன வெண்ணெயும்
பாரு முறக்கமலர்ப்
பெண்பது மத்தன மீதிற்
குடந்தையின் பேருரைக்கில்
எண்பது மத்தன வெட்டெழுத்
தாமென வேற்றிடுதல்
பண்பது மத்தன தீயணி
வாரொரு பாகருக்கே !

(பொ-ரை) கையில் மழுவென்ற ஆயுதத்தை ஏந்தி உள்ள சிவனை யொருபாகத்தில் கொண்ட ஆராவமுதன் உண்பது, மத்தினால் கடையப்பட்ட வெண்ணெயும் இவ்வுலகமும் ஆகும். உறக்கம் கொள்வது பொற்றாமரையில் அவதரித்த திருமகளின் கொங்கைகளிலும், குடந்தையாகிய திவ்ய தேசத்திலும் ஆம். அத்திவ்யதேசத்தின் பெயரை ஒருமுறை யோதினால் அதனையே

அவனது எட்டெழுத்துத் திருநாமத்தை ஓதினதாகவே ஏற்றுக்கொள்வது அவனது சிறந்த திருவருளாகும்!

(கு-ரை) "உறக்கமலர்ப்பெண்பதுமத்தனமீதே" என்ற பகுதி "நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மணி மார்பா" என்ற திருப்பாசுரத்தை நினைப்பிக்கின்றது.

81. பாகா விசையன் மணிநெடுந்
தேர்க்கன்று பார்மதிக்கப்
போகா விசையற் கருள்செய்வை
யேநெல்லும் பூவும்புல்லும்
நாகா விசையருந் துஞ்சீர்க்
குடந்தையை நாடுகின்றேன்
சாகா விசையளித் தென்னையுங்
கூட்டன்பர் சங்கத்திலே!

(பொ-ரை) அன்றொரு காலத்து அருச்சுனனது மணிகள் கட்டப்பட்ட பெரிய தேருக்குச் சாரதியாகப் போய் உலகம் போற்றுமாறு அவ்வருச்சுனனுக்குக் கீதையை அருள் செய்தாய், இளமை பொருந்திய பசுக்கள் ஒதுங்கிய நெற்பயிரையும், பூவையும், புல்லையும் விரும்பித் தின்னுகின்ற உமது குடந்தைப் பதியை விரும்பித் தொழுகின்றேன். எனக்கு இறவாப்பெரும் பதம் தந்தருளி உன் அன்பர்களது கூட்டத்தில் அடியேனையும் ஒருவனைச் சேர்த்தருளுவாயாக!

82. சங்குழ லும்பின் புழவ
ருழாவா றங்குடந்தை
யிங்குழ லும்பவ மெல்லா
மொழிக்குமவ் வெல்லைசொல்லீ

ரங்குழ லுங்கனி மீதுவைத்
தாள்துகி லன்றுபெற்ருள்
பைங்குழ லும்பகை யும்முடித்
தாளடி பற்றியரோ !

(பொ-ரை) நாட்டீரே ! உழவர்கள் வயல்களே உழ வேண்டிய நிலேயில்லாது சங்குகள் ஊர்ந்து செல்லுகின்ற வயல் வளங்கொண்ட குடந்தையின் பெயரை உங்கள் வாழ்நாள்முடிவுறும் அத்தருணத்திலாவது உங்கள்பிறவி நோய் அழியும்வண்ணம் சொல்லுங்கள். ஆராவ முதனது திருவடிகளே உறுதியுடன் பற்றிக்கொண்ட காரணத்தால் அன்று பாஞ்சாலி தனக்காக அருச்சு னனுல் வீழ்த்தப்பட்ட கனியை மரத்திற் பொருந்துமாறு செய்தாள். மேலும் மானங்காக்க துகில் வளரப்பெற்ருள். சபதம் செய்துகொண்டவாறே கூந்தலேயும் முடித்துப் பகைவர்களேயும் முடித்தாள்.

83. பற்றியொ ராவி யொராவியில்
வந்திபம் பண்டழைத்தோன்
துற்றிய ராவிற் றுயில்வோன்
குடந்தையைச் சூழவந்தால்
செற்றிய ராவி யிருவினே
வேரைச் சிதைக்குநல்ல
முற்றிய ராவிற் றயல்வரும்
வாரும் முயல்வதற்கே !

(பொ-ரை) ஒரு உயிர் மற்ருெரு உடலிற் புகுத லாகிய வேறு ஒரு பிறப்பினே அடைந்து யானேயாகி அன்று ஒரு குளத்தில் நின்று அதனுல் ஆதி மூலமே யென்றழைக்கப் பெற்றவனும், புள்ளிகள் பொருந்திய படத்துடன் கூடிய பாம்பணேயிலே பள்ளி கொண்டவனு

மாகிய ஆராவமுதனுக்குரிய குடந்தையை நீவிர் வலம் வந்தால் உங்களுடைய இருவினை மரத்தின் பாவமாகிய வேரைக் கொத்தி அராவி அழிப்பான். மேலும் வீட்டு லகமும் அளிப்பான். ஆதலாலே அதற்கு முயல வாருங்கள் !

84. முயல்வா ரணங்கள் படும்வலை
கட்டி முயல்வதற்கிங்
கயல்வா ரணம்படு மென்றறிந்
தேனென் மனவலைக்கே
துயல்வா ரணந்திரி தூய்நீர்க்
குடந்தையில் கண்வளரும்
புயல்வா ரணந்திக ழச்சிங்கம்
வந்து புகுந்தபின்னே !

(பொ-ரை) பார்வை மிருகமாக யானையை வைத்து வலைகட்டி யானைபிடிக்க முயற்சி செய்தால் யானைக்கு மாருக மற்றொரு விலங்கு அகப்படும் என்றவொரு விசித் திரப் போக்கையறிந்து கொண்டேன். எப்பொழு தென்ருல், என் உள்ளமாகிய வலையில் சங்குகள் ஊர்ந்து செல்லுகின்ற தூய தீர்த்தங்களையுடைய குடந்தையில் அறிதுயில் கொள்ளும் மேகநிறம் பொருந்திய யானை (ஆராவமுதப் பெருமான்) பார்வை மிருகமாக இருக்க அதைக்கண்டு ஒரு சிங்கம் (நரசிங்கமூர்த்தி) வந்து என் உள்ளத்தில் புகுந்ததன் பிறகே !

(கு ரை) "மானைக் காட்டி மான்பிடிப்பது போல்" என்றும் "யானையால் யானை யாத்தற்று" என்றும் பார்வை மிருகம்வைத்து மிருகம் பிடிக்கும் முறையை இலக்கியங்களில் பரக்கக் காணலாம். பெரும்பாலும் ஒரு மானை வலையிலே யகப்படுத்தி அதன்மூலம் சில மானைப் பிடிப்பதுதான் பண்டைய வழக்கம். "மிருகம்" என்ற சொல்லுக்கே மான் என்பது பொருள். திருமாலின் பல

அவதாரங்களையும் தன்மனம் எண்ணுகிறது என்பதனை ஆசிரியர் சமத்காரமாகச் சொல்லுகிருர் !

85. பின்னையி லான்வெண்ணெய் முன்னயி
லாயன் பிறங்கொளிசேர்
மின்னயி லார்படை நேமிதொட்
டான்விரி நீர்க்குடந்தை
யென்னையில் சாருயிர் நெஞ்சே
பொருமென் றெமையழைக்கும்
அன்னையில் லார்பசித் தையமென்
ஞமனன் ருற்றுகவே !

(பொ-ரை) மனமே ! நப்பின்னையின் நாயகனும், முன்பு வெண்ணெயுண்ட ஆயனும், மிகுந்த ஒளி பொருந்திய சக்கரப் படையை ஏந்தியிருப்பவனுமாகிய ஆராவமுதன் எழுந்தருளியுள்ள குடந்தைப் பதியிலே சென்று இனிவரும் பிறப்புகளிலே அன்னையென்று அழைக்கப் பெறுவாரில்லாதபடியும் பசித்து ஐயமென்று ஏற்காதபடியும் உள்ள நிலைமையை ஏற்படுத்திக் கொள்வாயாக.

(கு-ரை) இக்கருத்தை முன் 48-ஆம் செய்யுளிலுங் காணலாம்.

86. ஆற்றுக் கணக்கடல் சங்குவந்
தாவி புகுந்தயற்பூஞ்
சேற்றுக் கணக்குங் குடந்தைப்
பிரான்திரு மாலடியெங்
பாற்றுக் கணக்கரிற் காட்டி
மெய்க்காட்டுப் படவுழலுங்
கூற்றுக் கணக்கை யெழுதெழுத்
தாணி குலைத்ததுவே !

(பொ-ரை) கடலிலேயிருந்த சங்குகள் ஆற்றின் வழியே வந்து குளங்களிற் புகுந்து பக்கத்தே உள்ள பழனங்களை அடைந்து மடைவாயில்களிலே அடைப்பாக அணைந்திருக்கின்ற வளப்பமுள்ள குடந்தையில் எழுந்தருளியுள்ள பெருமானுடைய திருவடிகள், கணக்கரைப் போல இருந்து என் பற்றுவரவுக் கணக்கைக் காட்டி மெய்க்காட்டைப்பதிவு செய்வதற்காக என்னைத் தொடர்ந்து நிற்கின்ற இயமன் எழுதுவதற்கான எழுத்தாணியை ஒடித்துவிட்டது.

(கு-ரை) திருமாலடி ஒடித்துவிட்டது என முடிக்க. பாவ புண்ணியக் கணக்கைக் காட்டி என்னைப் பிறப்பிக்க முடியாது என்பது கருத்து.

87. குலைக்கமு கின்றலை மீதேபுயலின்
குழா மகர
வலைக்கமு தந்தந் தார்க்குங்
குடந்தையி லன்பர்துன்பம்
தொலைக்கமு தந்தந் தராவணை
மீது துயின்றவரென்
புலைக்கமு கந்தத்தில் கால்வைத்த
வாவினை போய்விடவே !

(பொ-ரை) பாக்குக் குலைகளை உடைய பாக்கு மரத்தின்மீது தங்கியுள்ள மேகங்கள் தம் அமுதத்தைக் கடலுக்கு ஈந்து வரம் வேண்டியிரக்கின்ற குடந்தைப் பதியிலே அன்பர்களது துன்பத்தைப் போக்க அமுதம் (துழாய்த் தீர்த்தம்) தந்து அரவணையில் துயில்கின்ற பெருமான் என் மரணத் தறுவாயில் இனி வரவிருக்கின்ற பிறவி நோய் அடியோடு இற்றுப் போம்வண்ணம் தம் திருப்பாதங்களை வைத்தருளிய பேற்றை என்னென்றுரைப்பேன் !

(கு-ரை) " அன்பர் துன்பம் தொலைக்க " என்ற பகுதி " அடியார் படுதுயராயினவெல்லாம் நிரந்தரம் செய்யும் " என்ற சீரிய அடியைச் சிந்திக்க வைக்கின்றது.

88. விடப்பட வாடரங் குள்ளே
சிகாமணி வெய்யில்மெய்யில்
படப்பட வாடும் பெருமான்
குடந்தையில் பாவமெல்லாம்
கிடப்பட வாடுபொற் றுமரை
யாகிய கேணியிற்றேய்ந்திட்
டிடப்பட வாடும் பவங்களன்
றேமுத்தி யென்கைநன்றே !

(பொ-ரை) விஷம் பொருந்திய படத்துடன் கூடிய அரங்காகிய ஆதிசேடன் தலைகளிலே தங்கியுள்ள இரத்தினங்களின் பேரொளி திருமேனியில் படப்பட அவ்வெப்பம் பொறுக்காது வாடுகின்ற பெருமானுக்குரிய குடந்தையில் பாவமெல்லாம் தொலைந்து ஒழியுமாறு மூழ்குகின்ற பொற்றுமரை என்ற பெயர்கொண்ட கேணியில் தோய்ந்து எழ உடனே பிறவித்துன்பம் தேய்ந்து அழியும். இதனை முத்தியென்று சொல்லுவது நன்று ?

89. என்கண்ண னின்கண்ண னெனக்கன்று
மாயவ னென்றிளையோர்
வன்கண்ணன் முன்சொன்ன வார்த்தையுள்
ளான்வட மாமிதிலை
மின்கண்ண னின்று சிலைவாங்கு
தோளவன் வாழ்குடந்தை
நன்கண்ணன் முக்கண்ணன் நாற்கண்ண
ஞன்முக னற்றந்தையே !

(பொ-ரை) கண்ணன் எனக்குரியவன் ; இல்லை எனக்குரியவன் ; ஆம் ! எனக்கு மாயவனாக இருக்கின்

ருன் ; என்னிடத்தில் வஞ்சகனுகை இருக்கின்ருன் என் றெல்லாம் சேரியில் ஆயர்குலத்துக் காதலிமார் சொல் லிய பேச்சுக்களுக்குப் பாத்திரமானவன் யாவன் எனின் மின்போன்ற ஒருபெண்ணினையடைய மிதிலையிலே சிலே வளைத்த மேலவனுகி நல்லகண்களாகிய மூன்றுகண்களை யுடைய சிவனுக்கும், நான்கு பக்கங்களிலுங் கண் கொண்ட நான்முகனுக்குந் தந்தையாகக் குடந்தைப் பதியில் உள்ள ஆராவமுதனே !

90. நற்றந்த காள கராசலம்
போல்திரு நாமஞ்சொல்வார்க்
கற்றந்த காவென் றறிந்திலே
யாலலே சூழ்குடந்தைச்
சுற்றந்த கால வாத்தெவ்
விடத்தெவ் விடந்துகைத்துச்
செற்றந்த காலத்து நீர்விளே
யாடிய சேலுளதே !

(பொ-ரை) பொருள் விளங்கவில்லே.

91. சேலாமை யேன மரிமூவி
ராமர் திருக்குறளாய்
பாலமை வண்ணர் பரியா
மவர்பசுந் தேன்விரும்பிச்
சூலாமை நீல மருந்துங்
குடந்தையில் துயிலேநெஞ்சில்
கோலாமை யாலல்ல வோபுறப்
பேமிக் குவலேயத்தே !

(பொ-ரை) மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், பலராமர், பரசுராமர், இராமர், வாமனன், கண்ணன், கல்கி, என்ற பத்து அவதாரங்களைத்தானே விரும்பிமேற்

கொண்டபெருமான், சூல்கொண்ட ஆமை தேன் உண்ண விரும்பி நீலோற்பலப் பூவைத்தின்கின்ற குடந்தையிலே பள்ளிகொண்டிருக்குங் காட்சியை நெஞ்சில் இருத்தி நினைக்காததால் அல்லவா இப்பூமியில் நாம் மீண்டும் மீண்டும் மீண்டும் பிறக்கின்றோம் ?

92. குவலையப் பாதன கண்வெழ
வியற்சென்று மண்கொண்டவனிக்
கவலையப் பாகணித் தாண்டனை
யாய்கடற் காவிரியின்
றிவலையப் பார வயல்சூழ்
குடந்தையிற் செல்வனென்பாற்
கவலையப் பாகரிக் கேயது
போல்வந் தருள்செய்கையே !

(கு-ரை) பொருள் விளங்குமாறு மூலம் இல்லை.

93. சொக்காயிக் காய செழுநீர்க்
குடந்தையின் செந்திருவின்
மக்காயிக் காய மரகத
வோடை மருவுமுற்றார்
தொக்காயிக் காய மருந்தென்று
பாலைத் துளிப்பினது
விக்காயிக் காயம் விழும்போதென்
ஞவிவிழும் பொய்கையே !

(பொ-ரை) செந்நிறம் பொருந்தியதாயும், கருப்பஞ் சாறு போன்றதாகவும் உள்ள தண்ணீர் நிரம்பப்பெற் றுள்ளதும், குடந்தைக்கேயுரியதும், திருமகளின் பிறப் பிடமாகவுள்ளதும் ஆகிய பொற்றாமரைத் தடாகமானது, என்னைச் சேர்ந்திருக்கும் உற்றார்கள் கூடிநின்று நான் பிணியுற்ற காலத்து இந்த மருந்தை அருந்து என்று

சொல்லி வாயில் பாலை ஊற்றினால் அது விக்கி இவ்வுடல் தன்வசமற்று விழும்பொழுது அதில் இருக்கும் என்ஆவி விழுகின்ற பொய்கையாகும்.

94. பொய்கையி னற்கவி கொண்டுமென்
புன்சொல் பொறுத்தது ......
நய்கயி னற்கவி ரோத
குமாரற்கு காயதுபின்னை
வைகையி னற்கவி மாளவைத்
தாற்கும் குடம்பத்துக்
கொய்கையி னற்கவி வானோர்க்
கருளுங் குடந்தையற்கே!

(கு-ரை) பொருள் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

95. குடந்தை யராவணைக் கோயிலும்
பள்ளிகொள் கோலமும்பூ
மடந்தைய ரால்வரு டுந்திருத்
தாளும் மனத்தகத்துக்
கிடந்தைய ராவரி கேசவ
கேசவ வென்பவர்வான்
கடந்தைய ராலயங் காண்பாரிப்
பாயக் கடல்களைந்தே!

(பொ-ரை) கும்பகோணத்துள்ள ஆராவமுதனது திருக்கோயிலும், அப்பெருமான் பள்ளி கொண்டிருக்கும் பேரழகும், திருமகளாலும் பூமகளாலும் மெல்லென வருடப்பெறும் திருவடிகளும், உள்ளத்திற் பதிந்துகிடக்க, ஒரு சிறிதும் மறக்காது. அரியே! கேசவனே! கேசவனே என்று அவனது திருநாமங்களைச் சொல்லுபவர்கள் இந்த பரந்த கடல் சூழவுள்ள உலகினின்று

நீங்கி உம்பருலகினைக் கடந்து நிற்கின்ற வைகுந்தத் திருக்கோயிலைக் காண்பார்கள் !

96. களைக்கு வளைக்குக் கடசிக்கை
நீட்ட கலந்துறவு
வளைக்கு வளைக்குலம் பேசு
மரங்கன் மதுகாம்பூந்
தளைக்கு வளைக்கும் விரும்புங்
குடந்தை ... யரையன்
றளைக்கு வளைக்கும் பிரானென்னு
மாயத் தவர்வரவே !

(கு-ரை) பெரருள் விளங்குமாறில்லை.

97. அறப்பாத வஞ்சகத் தன்றுதந்
தாய்மரு தஞ்சச்செற்ற
மறப்பாத வஞ்சகர் நெஞ்சத்திலாய்
மறவேன் மறையின்
பிறப்பாத வஞ்செய் பெரியோர்
குடந்தையின் பேரரவச்
சிறப்பாத வஞ்செய் பணிப்பாயல்
மேலுன் திருக்கிடையே !

(பொ-ரை) மருதமரம் அழியுமாறு உதைத்த திருப் பாதங்களை உடையவனே ! வஞ்சகர் நெஞ்சகத்து வாரா தவனே ! வேதங்களே உருக் கொண்டாற் போலே உள்ள வேதியர்கள் தவஞ் செய்கின்ற குடந்தையாகிய திவ்ய தேசத்தில் சிறப்புமிக்க தவம் செய்துள்ள ஆதி சேடனும் அரவணையிலே துயிலும் உன் திருக்கோலத்தை நான் ஒருபோதும் மறவேன்.

98. கிடப்பா யலைப்பவத் தன்றயன்
கீறிய கீற்றைநெஞ்சே
விடப்பாய நின்று சுற்றுகின்
றுய்விண்ணு மண்ணுடனே

கடப்பா யலைப்பகல் தந்தாய்
குடந்தைக் கருமுகிலே
படப்பாய லிற்கிடப் பாயென்று
போக்குன் பழவினையே !

(பொ-ரை) நெஞ்சே ! இங்கே வா ! பிரமன் அன்று எழுதிய எழுத்தைமீறி விடவேண்டும் என்று கருதி அலைகின்றாய் ! பாற்கடலில் கதிரவன் போல் காட்சி தருபவனே ! குடந்தையில் கார்மேகம் போன்றவனே ! பாம்பணையில் பள்ளி கிடப்பவனே என்றெல்லாம் சொல்லி, உன் பழவினையைப் போக்கிக் கொள். பிறவிக் கடலில் கிடக்கமாட்டாய். பிறகு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையுங் கடந்து வீட்டுலகத்தை அடையப் பெறுவாய்.

99. பழவினை யும்பவ முங்கெடு
மாறுநின் பாதங்கள்யான்
தொழநினை யும்படிக் கண்டரு
ளாததென் தொல்லைமண்மேல்
குழவினை யும்படி யீன்ற
ளொடாத குழவியுண்டே
விழவினை யுந்து குடந்தையில்
நாகணை மேலவனே !

(பொ-ரை) திருவிழாக்கள் இடையறாது நிகழ்ந்து கொண்டேயிருக்கின்ற திருக்குடந்தையிலே பாம்பணை மேற் பள்ளி கொள்ளும் பெருமானே ! நான் முன் செய்துள்ள தீவினைகளும், இப்பிறவியும் அழிந்தொழிமாறு நினது திருப்பாதங்களைப் பரவி தொழுமாறு நினைப்பிக்காதது என்னே ! குழந்தை, பசி முதலியவற்றால் துன்புற்றிருக்க பெற்ற தாயால் எடுக்கப்படாம லிருக்கின்றதொருசெயல் நாட்டில் எங்கேனும் உண்டோ இல்லையே!

100. கோலப் படுக்கை நிரைத்திலங்
கேசனைக் கொல்கவென்றே
சீலப் படுக்கைய ராகவ
ஞம்நவ தீர்த்தங்களா
மோலப் படுக்கை மறவாக்
குடந்தையி னுட்கிடந்த
யாலப் படுக்கையவ் வாரா
வமுதென்க ணாரமுதே !

(பொ-ரை) தருப்பைப் புல்லாகிய படுக்கையைப் பரப்பி அதன்மீதே எழுந்தருளியிருந்து இலங்கேசனைக் கொன்று வருக என்று ஏவப்பெற்றனவும், பெருந்திறல் வாய்ந்தனவுமாகிய அம்புகளை உடைய இராகவனே! பாற்கடற்போன்ற பள்ளியையும் மறந்து குடந்தையிலே ஆலந்தரித்துள்ள அரவணையின்மேல் துயிலுகின்ற ஆராவமுதனவான். அவன் என் கண்களுக்குத் தெவிட்டாத அமுதமாயுள்ளான்.

# விளங்காத பாடல்கள்

---

6. நாத்தசங் தத்தற வென......
   றற்கு நாணிவிண்ணோர்
சாத்தசங் தத்தலை சாய்த்தவந்
   நாள்சட கோபர்முன்னங்
கோத்தசங் கத்தமிழ்ப் பாமண
   நாறுங் குடந்தையில்பார்
பூத்தசங் கத்தட மேயெனச்
   செய்தானப் புரந்தரனே !

22. சேரா வமுது கிடையோ
   றெவன்ன சிந்தையர்தோள்
கூரா வமுது கதியின்றி
   யேகுடந் தைக்கிடந்த
வாரா வமுதொரு பெண்
   பொருட்டாலலை தூர்த்துவிற்கொண்
டோரா வமுது கனிவா
   னவனடி யோதினர்க்கே !

23. ஓதின்ற கார்கலி மா...
   சும்பில்
போதின்ற காரிரு ளென்னவைத்
   தாய்நெல்லு பூவுபுல்
லோதின்ற கார்வய லேருழ......
   வாரிகுடந்தை
......தேயென்று நானுன்னைக்
   ......கூடுவதே !

25. நற்பத........
ஞாலத்தர நாகாப்பொதி
......பதத தா கா ரெ ஞேத
குங்கண்ண ரெயிலக்குடந்தை
வெற்பதக தாகர தேந்திய
கோவ வேத கார்சேகரா
பகெரென சித்தந்தரே !

33-(அ) புரப்பவ ராகப் பெரும்புனல்
......மூழ்கிக் புவிமட
......காலிபின் பொய் புரப்பவராக
......அவ்வண்டார்குடந்
தைப்பதியினற் பொயவரப் பவராகம்
...விடுமனமெய்தி வாரலேயே !

(குறிப்பு) இச்செய்யுளின் பெரும்பகுதியைப் பூச்சிகளரித்துள்ளன.

33 -(ஆ) வாரலேச் சேர் களத்தாயு
வந்தாய்வன மாலித்துங்கப்
பொரலேச் செதந்தா வல்லதொபு
கலவனிறவி கொடிக்குறவைக்
காரலேச் சேர் கதிராழி
யிற்காணுங் கருத்தினர்க்கே !

(கு-ரை) இச்செய்யுளின் மற்றபகுதிகள் பூச்சிகளால் நீக்கப்ட்டுவிட்டன.

35. இறக்கம லத்திறை யேகோத
தத்தன் றிலேயில்வந்த
வுறக்கம லத்த வொருவா
றறெவுண வோடாசெ

யறக்கம லத்துறைக் காவி
சூழு மணிக்குடந்தை
துறக்கம லப்புவி யென்றே
விழித்துத் துயில்வதுவே !

39. அடித்தல மேலண்ட கோளகை
யைத்திறந் தந்தணன்பால்
முடித்தல மேயென் றவனுக்
கருளு முளரிச்செங்கை
மிடித்தல மேனை மருகற்
கொழிக்குமிம் மேதினிகீண்
டிடித்தல மேதரு மின்சேர்
குடந்தை யிறைவருக்கே !

43. கமலங்கை யானன நாடுமென்
றிந்திர னந்தணிந்து
கமலங்கை யானன நாடுங்
குடந்தையிற் கார்கரவாக்
கமலங்கை யானன நாடுமன்
பர்சூடிக் கழித்தபித்தா
கமலங்கை யானன நாடுஞ்சி
லம்புநங் கண்ணதென்றே !

# செய்யுள் முதற் குறிப்பு—அகர வரிசை


| செய்யுள் முதற் குறிப்பு | பக்கம் | செய்யுள் முதற் குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| அடித்தலமே | 62 | ஓதின்ற | 60 |
| அண்ணலனந்த | 39 | கடப்பாடு பூணவன் | 43 |
| அரிநமநாரண | 40 | கடற்கேகய | 14 |
| அல்லுமுருக்குங் | 40 | கண்டுகளாவி | 45 |
| அறப்பாத வஞ்சகத் | 57 | கண்ணனை | 31 |
| அறவேதனை | 34 | கமலங்கை | 62 |
| ஆங்கமுகிற்றலை | 41 | கரதலந்தாமரை | 1 |
| ஆண்டவனை | 44 | கரவலவன்பல | 30 |
| ஆரணத்தந்தத்தும் | 4 | கருத்தினன் | 23 |
| ஆராவமுதின் | 3 | காட்டமரங்களை | 42 |
| ஆற்றுக்கணக்கடல் | 51 | காரணையானை | 39 |
| இருப்பவரந்தர | 11 | காலத்திலத்தனை | 10 |
| இறக்கமலத்திறை | 61 | கிடைக்குமென்றே யினி | 19 |
| இறைவரையால | 25 | குடந்தையிலையாயுத | 9 |
| உண்பதுமத்தன | 47 | குடந்தையராவனை | 56 |
| உரைத்தவருக்கும் | 41 | குலைக்கமுகின்றலை | 52 |
| உறக்கந்தரத்தற் | 26 | குவலையப்பாதன | 55 |
| உறுகதிக்குத்தளர் | 15 | கூடுகையாமல் | 17 |
| உறைவிடமோதனி | 38 | கூடும்படிவிட்டு | 7 |
| எய்க்குமிடைக்கும் | 35 | கூறினமாய | 28 |
| எய்துகைக்கும் | 21 | கோணாத்த நேர்வழி | 12 |
| என் கண்ணன் | 53 | சங்குழலும்பின்பு | 48 |
| என்றவரைப்புறம் போகாமல் | 32 | சயனத்தனை | 31 |
| என்றுமதிக்கும் | 27 | சாபத்தனத்தை | 29 |
| ஒழிவன | 6 | சித்தத்திருக்கும் | 18 |

| செய்யுள் முதற் குறிப்பு | பக்கம் | செய்யுள் முதற் குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| சிறந்தவனைக்கும் | 24 | பிறப்பறவைக்கும் | 25 |
| செப்புவனத்துறை | 33 | பின்னையிலான் | 51 |
| செய்வனவாவி | 30 | புரந்தரனேரணை | 7 |
| செருக்காலயர்ப்பினும் | 15 | புரப்பவராக | 61 |
| சேராவமுது | 60 | பூராந்தகாரணர் | 33 |
| சேலாமையேனம் | 54 | பேதமையாமுத்தி | 12 |
| சேலுஞ்செந்தாமரை | 2 | பொய்கையினுற்கவி | 56 |
| சொக்காயிக்காய் | 55 | போதனும்மானும் | 5 |
| சொல்வலியாலம் | 26 | மரகதத்துக்கும் | 36 |
| சோதித்தனை | 45 | மரணங்கள்நான்கு | 16 |
| துயிலும்பணியும் | 13 | மறக்க வல்லாய் | 46 |
| துயில்வாய்த் தலையற்று | 23 | மாதவனச்சுதன் | 14 |
| தொழுதிக்களிவண்டு | 20 | மாயங்களையும் | 8 |
| நலம்பெற்றவாவி | 42 | முயல்வாரணங்கள் | 50 |
| நற்பத | 61 | முன்னவனித்தன் முராரி | 10 |
| நற்றந்தகாள | 54 | மெய்யனனந்த | 43 |
| நாத்தசங்கத் | 60 | வருந்தாரணியம் | 22 |
| நிழற்கோவலம்வரும் | 35 | வளரிக்கு நெல்லும் | 5 |
| நின்றன வேதம் | 9 | வல்லயிலாமை | 46 |
| நெறிக்கப்படா | 36 | வல்வினையானவை | 18 |
| படராகுவிக்கும் | 38 | வாரலைசேர் | 61 |
| பதந்தந்தவா | 32 | விடப்படவாடரங்குள் | 53 |
| பற்றியொராவி | 49 | விடாதிருமிக்குஞ்சி | 19 |
| பாகாவிசையன் | 48 | வித்தகரத்த | 21 |
| பாதகரான | 29 | வெளிப்பட்டவாடகத் | 37 |
| பாராளனையவர் | 28 | | |


திருச்சி சேவா சங்க அச்சகம், திருச்சிராப்பள்ளி-1